ஸ்ரீ.

# சிலப்பதிகாரம்.

R01C9:22

முதலாவது

## புகார்காண்டம்.

இஃது.

சென்னை பிரொஸிடென்சி காலேஜ்
தமிழ்ப்பிரதமபண்டிதராகிய
ஸ்ரீநிவாசராகவாசாரியாரவர்களால்

ஊ - புஷ்பரத செட்டியாரவர்களது
கலாரத்நாகரமென்னும்
அச்சுக்கூடத்திற்
பிரசுரஞ் செய்யப்பட்டது.
1876

**Matriculation Tamil Text Book for 1875.**

(Complete Expurgated Edition.)

*Price As. 12, Postage As. 2.*

---

சிலப்பதிகாரம் ரூபா - 1. தபாற்செலவு அணா - 1½

- 2.

---

தண்டியலங்காரம் ரூபா - 1½. தபாற்செலவு அணா

ஸ்ரீ

# சிலப்பதிகாரம்.

## பதிகம்.

### அகவல்.

குணவாயிற்கோட்டத் தரசுதுறந்திருந்த
குடக்கோச்சேர லிளங்கோவடிகட்குக்
குன்றக்குறவ ரொருங்குடன்கூடிப்
பொலம்பூவேங்கை நலங்கிளர்கொழுநிழல்
ஒருமுலையிழந்தாளோர் திருமாபத்தினிக்
கமரர்க்கரசன் றமர்வந்தீண்டியவள்
காதற்கொழுநனைக் காட்டியவளொடெம்
கட்புலங்காண விட்புலம்போய
இறும்பூதுபோலு மறிந்தருணீயென
அவனுழையிருந்த தண்டமிழ்ச்சாத்தன்
யானறிகுவனது பட்டதென்றுரைப்போன்
ஆரங்கண்ணிச் சோழன்மூதூர்
பேராச்சிறப்பிற் புகார்நகரத்துக்
கோவலனென்பா னோர்வாணிகனவ்வூர்
நாடகமேத்து நாடகக்கணிகையோ
டாடியகொள்கையி னரும்பொருள்கேடுறக்
கண்ணகியென்பாண் மனைவியவள்காற்
பண்ணமைசிலம்பு பகர்தல்வேண்டிப்
பாடல்சால்சிறப்பிற் பாண்டியன்பெருஞ்சீர்
மாடமதுரை புகுந்தனனதுகொண்டு
மன்பெரும்பீடிகை மறுகிற்செல்வோன்
பொன்செய்கொல்லன் றன்கைகாட்டக்
கோப்பெருந்தேவிக் கல்லதையிச்சிலம்
பியாப்புறவில்லையீங் கிருக்கென்றேகிப்
பண்டுதான்கொண்ட சில்லரிச்சிலம்பினைக்
கண்டனன்பிறனோர் கள்வன்கையென

வினைவிளைகாலமாகலின்யாவதுஞ்
சினையலர்வேம்பன் றேரானாகிக்
கன்றியகாவலர்க் கூஉய்க்கள்வனைக்
கொன்றச்சிலம்பு கொணர்கவீங்கெனக்
கொலைக்களப்பட்ட கோவலன்மனைவி
நிலைக்களங்காணா ணெடுங்கணீருகுத்துப்
பத்தினியாகலிற் பாண்டியன்கேடுற
முத்தாரமார்பின் முலைமுகந்திருகி
நிலைகெழுகூடல் நீளெரியூட்டிய
பலர்புகழ்பத்தினி யாகுமிவளென
வினைவிளைகால மென்றீரியாதவர்
வினைவிளைவென்ன விறலோய்கேட்டி
அதிராச்சிறப்பின் மதுரைமூதூர்
கொன்றையஞ்சடைமுடி மன்றப்பொதியில்
வெள்ளியம்பலத்து நள்ளிருட்கிடந்தேன்
ஆரஞருற்ற வீரபத்தினிமுன்
மதுரைமாத்தெய்வம் வந்துதோன்றிக்
கொதியழற்சீற்றங் கொங்கையின்விளைத்தோய்
முதிர்வினைநுங்கட்கு முடிந்ததாதலின்
முந்தைப்பிறப்பிற் பைந்தொடிகணவனொடு
சிங்காவண்புகழ்ச் சிங்கபுரத்துச்
சங்கமனென்னும் வாணிகன்மனைவி
இட்டசாபங் கட்டியதாதலின்
வாரொலிகூந்தனின் மணமகன்றன்னை
ஈரேழ்நாளகத் தெல்லைநீங்கி
வானோர்தங்கள் வடிவினல்லதை
ஈனோர்வடிவிற் காண்டலில்லெனக்
கோட்டமில்கட்டுரை கேட்டனன்யானென
அரசியல்பிழைத்தோர்க் கறங்கூற்றாவதூஉம்
உரைசால்பத்தினிக் குயர்ந்தோரேத்தலும்
ஊழ்வினையுருத்துவந் தூட்டுமென்பதூஉஞ்
சூழ்வினைச்சிலம்பு காரணமாகச்
சிலப்பதிகார மென்[illegible]

நாட்டுதும்யாமோர் பாட்டுடைச்செய்யுளென
முடிகெழுவேந்தர் மூவர்க்குமுரிய
அடிகணீரே யருளுகென்றாற்கவர்
மங்கலவாழ்த்துப் பாடலுங்குரவர்
மனையறம்படுத்த காதையுநடநவில்
மங்கைமாதவி யரங்கேற்றுக்காதையும்
அந்திமாலைச் சிறப்புச்செய்காதையும்
இந்திரவிழவூ ரெடுத்தகாதையும்
கடலாட்டுக்கா தையுமடலவிழ்
கானல்வரியும்வேனில் வந்திறுத்தென
மாதவியிரங்கிய காதையுந்தீதுடைக்
கனாத்திறமுரைத்த காதையும்வினாத்திறத்து
நாடுகாண்காதையுங் காடுகாண்காதையும்
வேட்டுவவரியுந் தோட்டலர்கோதையொடு
புறஞ்சேரியிறுத்த காதையுங்கறங்கிசை
ஊர்காண்காதையுஞ் சீர்சானங்கை
அடைக்கலக்காதையுங் கொலைக்களக்காதையும்
ஆய்ச்சியர்குரவையுந் தீத்திறங்கேட்ட
துன்பமாலையு நண்பகனடுங்கிய
ஊர்சூழ்வரியுஞ் சீர்சால்வேந்தனொடு
வழக்குரைகாதையும் வஞ்சினமாலையும்
அழற்படுகாதையு மருந்தெய்வந்தோன்றிய
கட்டுரைகா தையுமட்டலர்
கோதையர்குன்றக்குரவையுமென்றிவை
அனைத்துடன்காட்சிகால் கோணீர்ப்படை நடுகல்
வாழ்த்து வரந்தருகாதையொ
டிவ்வாறைந்தும்
உரையிடையிட்ட பாட்டுடைச்செய்யுள்
உரைசாலடிக ளருளமதுரைக்
கூலவாணிகன் சாத்தன்கேட்டனனிது
பால்வகைதெரிந்த பதிகத்தின்மரபென.

பதிகமுற்றிற்று.

# சிலப்பதிகாரம்.

## கட்டுரை.

அன்றுதொட்டும் பாண்டியனாடு
மழைவறங்கூர்ந்து வறுமையெய்தி
வெப்புநோயுங் குருவுந்தொடரக்
கொற்கையிலிருந்த வெற்றிவேற்செழியன்
நங்கைக்குப்பொற்கொல்ல ராயிரவரைக்கொன்று
களவேள்வியால்விழ வொடுசாந்திசெய்ய
நாடுமலியமழைபெய்து நோயுந்துன்பமுநீங்கியது. (க)

அதுகேட்டு“ கொங்கிளங்கோசர் தங்கணாட்டகத்து
நங்கைக்குவிழவொடு சாந்திசெய்ய
மழைத்தொழிலென்று மறவாதாயிற்று. (உ)

அதுகேட்டு“ கடல்சூழிலங்கைக் கயவாகுவென்பான்
நங்கைக்குநாட்பலிபீடிகை கோட்டமுந் துறுத்தாங்
கரந்தைகெடுத்து வரந்தருமிவளென
ஆடித்திங்க ளகவையினாங்கோர்
பாடிவிழாக்கோள் பன்முறையெடுப்ப
மழைவீற்றிருந்து வளம்பலபெருகிப்
பிழையாவிளையு ணாடாயிற்று. (ங)

அதுகேட்டு“ சோழன்பெருங்கிள்ளி கோழியகத்தே
எத்திறத்தானும் வரந்தருமிவளோர்
பத்தினிக் கடவுளாகுமென
நங்கைக்குப்பத்தினிக் கோட்டமுஞ்சமைத்து
நித்தல்விழாவணி நிகழ்வித்தோனே. (ச)

# புகார்காண்டம்.

முதலாவது,

## மங்கலவாழ்த்துப்பாடல்.

(*)

### சிந்தியல் வெண்பா.

திங்களைப்போற்றுதுந் திங்களைப்போற்றுதும்
கொங்கலர்தார்ச்சென்னி குளிர்வெண்குடைபோன்றிவ்
வங்கணுலகளித்தலான். (௧)

ஞாயிறுபோற்றுது ஞாயிறுபோற்றுதும்
காவிரிநாடன்றிகிரிபோற் பொற்கோட்டு
மேருவலந்திரிதலான். (௨)

மாமழைபோற்றுது மாமழைபோற்றுதும்
நாமநீர்வேலி யுலகிற்கவனளிபோல்
மேனின்றுதான்சுரத்தலால். (௩)

பூம்புகார்போற்றுதும் பூம்புகார்போற்றுதும்
வீங்குநீர்வேலி யுலகிற்கவன்குலத்தோ
டோங்கிப்பரந்தொழுகலான். (௪)

### ஆசிரியம்.

ஆங்கு—பொதியிலாயினு மிமையமாயினும்
பதியெழுவறியாப் பழங்குடி தழீஇப்
பொதுவறுசிறப்பிற் புகாரேயாயினும்
நடுக்கின்றிநிலைஇய வென்பதல்லதை
ஒடுக்கங்கூறா ருயர்ந்தோருண்மையின்
முடித்தகேள்வி முழுதுணர்ந்தோரே. (௫)

## சிலப்பதிகாரம்.

### மயங்கிசைக் கொச்சகக்கலிப்பா,

---

அதனால்'' நாகநீணகரொடு நாகநாடதனொடும்
போகநீள்புகழ்மன்னும் புகார்நகரதுதன்னில்
மாகவானிகர் வண்கைமாநாயகன்
குலக்கொம்பரீகை வான்கொடியன்னாள்
ஈராறாண்டகவையாள்.

அவளுந்தான்''போதிலார்திருவினாள் புகழுடைவடிவென்றும்
தீதிலாவடமீனின் திறமிவடிறமென்றும்
மாதரார்தொழுதேத்த வயங்கியபெருங்குணத்துக்
காதலாள்பெயர்மன்னுங் கண்ணகியென்பாண்மன்னோ
பெருநிலமுழுதாளும் பெருமகன்றலைவைத்த
ஒருதனிக்குடிகளோ டுயர்ந்தோங்குஞ்செல்வத்தான்
வருநிதிபிறர்க்கார்த்து மாசாத்துவானென்பான்
இருநிதிக்கிழவன்மக னீரெட்டாண்டகவையான்

அவனுந்தான் ' மண்டேய்த்தபுகழினான் மதிமுகமடவார்தம்
பண்டேய்த்தமொழியினா லாயத்துப்பாராட்டிக்
கண்டேத்துஞ்செவ்வே ளென்றிசைபோக்கிக்காதலாற்
கொண்டேத்துங்கிழமையான் கோவலனென்பான்மன்னோ.

அவரை'' இருபெருங்குரவரு மொருபெருநாளான்
மணவணிகாண மகிழ்ந்தனர்மகிழ்ந்துழி
யானையெருத்தத் தணியிழையார்மேலிரீஇ
மாநகர்க்கீந்தார்மணம்.

அவ்வழி'' முரசதிர்ந்தன முருடியம்பின
முறையெழுந்தன பணிலம்வெண்குடை
அரசெழுந்ததோர் படியெழுந்தன
அகலுண்மங்கல வணியெழுந்தது

மாலைதாழ்சென்னி வயிரமணித்தூணகத்து
நீலவிதானத்து நித்திலப்பூம்பந்தர்க்கீழ்
வானூர்மதியஞ் சகடணைய வானத்துச்
சாலியொருமீன் றகையாளைக் கோவலன்
மாமுதுப்பார்ப்பான் மறைவழிகாட்டிடத்
தீவலஞ்செய்வது காண்பார்கணோன்பென்னை
விரையினர் மலரினர் விளங்குமேனியர்
உரையினர் பாட்டின ரொசிந்த நோக்கினர்
சாந்தினர் புகையினர் தயங்கு கோதையர்
ஏந்திள முலையின ரிடித்த சுண்ணத்தர்
விளக்கினர் கலத்தினர் விரிந்தபாலிகை
முளைக்குட நிரையினர் முகிழ்த்த மூரலர்
போதொடுவிரிகூந்தற் பொலநறுங்கொடியன்னார்
காதலற்பிரியாமற் கவ்வுக்கைநெகிழாமல்
தீதறுகெனவேத்திச் சின்மலர்கொடுதூவி
அங்கணுலகி னருந்ததியன்னாளை
மங்கலநல்லமளி யேற்றினார்தங்கிய
இப்பாலிமயத் திருத்தியவாள்வேங்கை
உப்பாலைப்பொற்கோட் டுழையதாப்பாலுஞ்
செருமிகுசினவேற்செம்பியன்
ஒருதனியாழி யுருட்டுவோனெனவே. (௬)

முதலாவது.

மங்கலவாழ்த்துப்பாடல்

முற்றிற்று.

---

இரண்டாவது.

# மனையறம்படுத்தகாதை

---*---

நிலமண்டிலவாசிரியப்பா.

உரைசால்சிறப்பி னரசுவிழைதிருவிற்
பரதர்மலிந்த பயங்கெழுமாநகர்

முழங்குகடன் ஞால முழுவதும்வரினும்
வழங்கத்தவாஅ வளத்ததாகி
அரும்பொருடரூஉம் விருந்திற்றேய
மொருங்குதொக்கன்ன வுடைப்பெரும்பண்டம்
கலத்தினுங்காலினுந் தருவனரீட்டக்
குலத்திற்குன்றாக் கொழுங்குடிச்செல்வர்
அத்தகுதிருவி னருந்தவமுடித்தோர்
உத்தரகுருவி னொப்பத்தோன்றிய
கயமலர்க்கண்ணியுங் காதற்கொழுநனும்
மயன்விதித்தன்னமணிக்கா லமளிமிசை
நெடுநிலைமாடத் திடைநிலத்திருந்துழி
கழுநீராம்பன் முழுநெறிக்குவளை
அரும்புபொதியவிழ்ந்த சுரும்பிமிர்தாமரை
வயற்பூவாச மளைஇயயற்பூ
மேதகுதாழை விரியல்வெண்டோட்டுக்
கோதைமாதவிச் சண்பகப்பொதும்பர்
தாதுதெரிந்துண்டு மாதர்வாண்முகத்துப்
புரிகுழலளகத்துப் புகலேக்கற்றுத்
திரிதருஞ்சுரும்பொடு செவ்விபார்த்து
மாலைத்தாமத்து மணிநிரைத்துவகுத்த
கோலச்சாளரக் குறுங்கணுழைந்து
வண்டொடுபுக்க மணவாய்த்தென்றல்
கண்டுமகிழ்வெய்திக் காதலிற்சிறந்து
விரைமலர்வாளியொடு வேனில்வீற்றிருக்கு
நிரைநிலைமாடத் தரமியமேறிச்
சுரும்புணக்கிடந்த நறும்பூஞ்சேக்கை
கரும்பும்வல்லியும் பொருந்தோளெழுதி
முதிர்கடன் ஞால முழுவதும்விளக்கும்
கதிரொருங்கிருந்த காட்சிபோல
வண்டுவாய்திறப்ப நெடுநிலாவிரிந்த
வெண்டோட்டுமல்லிகை விரியன்மாலையொடு
கழுநீர்ப்பிணையன் முழுநெறிபிறழத்
தாருமாலையு மயங்கிக்கையற்றுத்

நீராக்காதலிற் றிருமுகநோக்கிக்
கோவலன்கூறுமோர் குறியாக்கட்டுரை.
குழவித்திங்க ளிமையவரேத்த
அழகொடுமுடித்த வருமையதாயினும்
உரிதுநின்னோ டுடன்பிறப்புண்மையின்
பெரியோன்றருக திருநுதலாகென
அடையலர்முனையகத் தமர்மேம்படுநர்க்குப்
படைவழங்குவதோர் பண்புண்டாகலின்
உருவிலாள னொருபெருங்கருப்புவில்
இருகரும்புருவ மாகவீக்க
மூவாமருந்தின் முன்னர்த்தோன்றலின்
தேவர்கோமான் றெய்வக்காவற்
படைநினக்களிக்கவத னிடைநினக்கிடையென
அறுமுகவொருவனோர் பெறுமுறையின்றியும்
இறுமுறைகாணு மியல்பினினன்றே
அஞ்சுடர்நெடுவே லொன்றுநின்முகத்துச்
செங்கடைமழைக்க ணிரண்டாயீத்தனன்
மாயிரும்பீலி மணிநிறமஞ்ஞைநின்
சாயற்கிடைந்து தண்கானடையவும்
அன்னநன்னுதான் மென்னடைக்கழிந்து
நன்னீர்ப்பண்ணை நறுமலர்ச்செறியவும்
அளியதாமே சிறுபசுங்கிளியே
குழலும்யாழு மமிர்துங்குழைத்தநின்
மழலைக்கிளவிக்கு வருந்தினவாகி
மடநடைமாதுநின் மலர்க்கைநீங்கா
துடனுறைமரீஇ யொருவாவாயின
நறுமலர்க்கோதைநின் னலம்பாராட்டுநர்
மறுவின்மங்கல வணியேயன்றியும்
பிறிதணியணியப் பெற்றதையெவன்கொல்
பல்லிருங்கூந்தற் சின்மலரன்றியும்
எல்லவிழ்மாலையோ டென்னுற்றனர்கொல்
நானநல்லகி னறும்புகையன்றியும்
மான்மதச்சாந்தொடு வந்ததையெவன்கொல்

திருமுலைத்தடத்திடைத் தொய்யிலன்றியும்
ஒருகாழ்முத்துட னுற்றதொன்றுண்டுகொல்
திங்கண்முத்தரும்பவுஞ் சிறுகிடைவருந்தவும்
இங்கிவையணிந்தன ரென்னுற்றனர்கொல்
மாசறுபொன்னே வலம்புரிமுத்தே
காசறுவிரையே கரும்பேதேனே
அரும்பெறற்பாவா யாருயிர்மருந்தே
பெருங்குடிவணிகன் பெருமடமகளே
மலையிடைப்பிறவா மணியேயென்கோ
அலையிடைப்பிறவா வமுதேயென்கோ
யாழிடைப்பிறவா விசையேயென்கோ
தாழிருங்கூந்தற் றையானின்னையென்
றுலவாக்கட்டுரை பலபாராட்டித்
தயங்கிணர்க்கோதை தன்னொடுதருக்கி
வயங்கிணர்த்தாரோன் மகிழ்ந்துசெல்வுழிநாள்
வாரொலிகூந்தற் பேரியற்கிழத்தியை
மறப்பருங்கேண்மையோ டறப்பரிசாரமும்
விருந்துபுறந்தரூஉம் பெருந்தண்வாழ்க்கையும்
வேறுபடுதிருவின் வீறுபெறக்காண
உரிமைச்சுற்றமோ டொருதனிப்புணர்க்க
யாண்டுசிலகழிந்த விப்பெருங்கிழமையிற்
காண்டகுசிறப்பிற் கண்ணகிதனக்கென. (க)

மனையறம்படுத்தகாதை
முற்றிற்று.

---

மூன்றாவது,

## அரங்கேற்றுக்காதை

தெய்வமால்வரைத் திருமுனியருள
எய்தியசாபத் திந்திரன்சிறுவனொடு
தலைக்கோற்றானத்துச் சாபநீங்கிய
மலைப்பருஞ்சிறப்பின் வானவர்மகளிர்

சிறப்பிற்குன்றாச் செய்கையொடுபொருந்திய
பிறப்பிற்குன்றாப் பெருந்தோண்மடந்தை
தாதவிழ்புரிகுழன் மாதவிதன்னை
ஆடலும்பாடலு மழகுமென்றிக்
கூறியமூன்றி லொன்றுகுறைபடாமல்
ஏழாண்டியற்றி யோரீராறாண்டில்
சூழ்கழன்மன்னற்குக் காட்டல்வேண்டி
இருவகைக்கூத்தி னிலக்கணமறிந்து
பலவகைக்கூத்தும் விலக்கினிற்புணர்த்துப்
பதினோராடலும் பாட்டுங்கொட்டும்
விதிமாண்கொள்கையின் விளங்கவறிந்தாங்
காடலும்பாடலும் பாணியுந்தூக்கும்
கூடியநெறியிற் கொளுத்துங்காலைப்
பிண்டியும்பிணையலு மெழிற்கையுந்தொழிற்கையும்
கொண்டவகையறிந்து கூத்துவருங்காலை
கூடைசெய்தகை வாரத்திற்களைதலும்
வாரஞ்செய்தகை கூடையிற்களைதலும்
பிண்டிசெய்தகை யாடலிற்களைதலும்
ஆடல்செய்தகை பிண்டியிற்களைதலும்
குரவையும்வரியும் விரவலசெலுத்தி
ஆடற்கமைந்த வாசான்றன்னொடு
யாழுங்குழலுஞ் சீருமிடறுந்
தாழ்குரற்றண்ணுமை யாடலோடிவற்றின்
இசைந்தபாட லிசையுடன்படுத்து
வரிக்குமாடற்கு முரிப்பொருளியக்கித்
தேசிகத்திருவி னோசைகடைப்பிடித்துத்
தேசிகத்திருவி னோசையெல்லாம்
ஆசின்றுணர்ந்த வறிவினனாகிக்
கவியதுகுறிப்பு மாடற்றொகுதியும்
பகுதிப்பாடலுங் கொளுத்துங்காலை
வசையறுகேள்வி வகுத்தனன்விரிக்கும்
அசையாமரபி னிசையோன்றானும்
இமிழ்கடல்வரைப்பிற் றமிழகமறியத்

தமிழ்முழுதுணர்ந்த தன்மையனாகி
எத்தியல்பொதுவிய லென்றிவ்விரண்டின்
நாட்டியநன்னூ னன்குகடைப்பிடித்
திசையோன்வக்கிரித் திட்டதையுணர்ந்தாங்
கசையாமரபி னதுபடவைத்து
மாற்றோர்செய்த வசைமொழியறிந்து
நாத்தொலைவில்லா நன்னூற்புலவனும்
ஆடல்பாட லிசையேதமிழே
பண்ணேபாணி தூக்கேமுடமே
தேசிகமென்றிவை யாசின்றுணர்ந்து
கூடைநிலத்தைக் குறியின்மிகுத்து
வாரநிலத்தை வாங்குபுவாங்கி
வாங்கியவாரத் தியாழுங்குழலும்
ஏங்கியமிடறு மிசைவனகேட்பக்
கூருகிற்கரணமுங் குறிப்பறிந்துசேர்த்தி
ஆக்கமுமடக்கமு மீத்திறம்படாமற்
சித்திரக்கரணமுஞ் சிதைவின்றுசெலுத்தும்
அத்தகுதண்ணுமை யருந்தொழின்முதல்வனும்
சொல்லியவியல்பிற் சித்திரவஞ்சனை
புல்லியவறிந்து புணர்ப்போன்பண்பின்
வர்த்தனைநான்கு மயலறப்பெய்தாங்
கேற்றியகுரலிளி யென்றிருநரம்பினை
ஒப்பக்கேட்கு முணர்வினனாகிப்
பண்ணமைமுழவின் கண்ணெறியறிந்து
தண்ணுமைமுதல்வன் றன்னொடும்பொருந்தி
வண்ணப்பட்டடை யாழ்மேல்வைத்தாங்
கிசையோன்பாடிய விசையினியற்கை
வந்ததுவளர்த்து வருவதொற்றி
இன்புறவியக்கி யிசைபடவைத்து
வாரநிலத்தைக் கேடின்றுபார்த்தாங்
கீரநிலத்தி னெழுத்தெழுத்தாக
வழுவின்றிசைக்குங் குழலோன்றானும்
ஈரேழ்தொடுத்த செம்முறைக்கேள்வியின்

ஓரேழ்பாலை நிறுத்தல்வேண்டி
வன்மையிற்கிடந்த தாரபாகமும்
மென்மையிற்கிடந்த குரலின்பாகமும்
மெய்க்கிளைநரம்பிற் கைக்கிளைகொள்ளக்
கைக்கிளையொழிந்த பாகமும்பொற்புடைத்
தளராத்தாரம் விளரிக்கீத்துக்
கிளைவயிற்பட்டன ளாங்கேகிளையும்
தன்கிளையழிவுகண் டவள்வயிற்சேர
ஏனைமகளிருங் கிளைவழிச்சேர
மேலதுழையிளி கீழதுகைக்கிளை
வம்புறுமரபிற் செம்பாலையாய
திறுதியாதி யாகவாங்கவை
பெறுமுறைவந்த பெற்றியினீங்காது
படுமலைச்செவ்வழி யரும்பாலையெனக்
குரல்குரலாகத்தற் கிழமைதிரிந்தபின்
முன்னதன்வகையே முறைமையிற்றிரிந்தாங்
கிளிமுதலாகிய வெதிர்படுகிழமையுங்
கோடிவிளரிமேற் செம்பாலையென
நீடிக்கிடந்த கேள்விக்கிடக்கையின்
இணைநரம்புடையன வணையுறக்கொண்டாங்
கியாழ்மேற்பாலை யிடமுறைமெலியக்
குழலின்மேற்கோடி வலமுறைவலிய
வலிவுமெலிவுஞ் சமனுமெல்லாம்
பொலியக்கோத்த புலமையோனுடன்
எண்ணியநூலோ ரியல்பின்வழாது
மண்ணகமொருவழி வகுத்தனர்கொண்டு
புண்ணியநெடுவரைப் போகியநெடுங்கழை
கண்ணிடையொருசாண் வளர்ந்ததுகொண்டு
நூனெறிமரபி னரங்கமளக்குங்
கோலளவிருபத்து நால்விரலாக
எழுகோலகலத் தெண்கோனீளத்
தொருகோலுயரத் துறுப்பினதாகி
உத்தரப்பலகையொ டரங்கின்பலகை

வைத்தவிடைநில நாற்கோலாக
வேற்றவாயி லிரண்டுடன்பொலியத்
தோற்றியவரங்கிற் றொழுதனரேத்தப்
பூதரையெழுதி மேனிலைவைத்துத்
தூணிழற்புறப்பட மாண்விளக்கெடுத்தாங்
கொருமுகவெழினியும் பொருமுகவெழினியுங்
கரந்துவரலெழினியும் புரிந்துடன்வகுத்தாங்
கோவியவிதானத் துரைபெறுநித்திலத்து
மாலைத்தாமம் வளையுடனாற்றி
விருந்துபடக்கிடந்த வருந்தொழிலரங்கத்துப்
பேரிசைமன்னர் பெயர்புறத்தெடுத்த
சீரியல்வெண்குடைக் காம்புநனிகொண்டு
கண்ணிடைநவமணி யொழுக்கிமண்ணிய
நாவலம்பொலந்தகட் டிடைநிலம்போக்கிக்
காவல்வெண்குடை மன்னவன்கோயில்
இந்திரன்சிறுவன் சயந்தனாகென
வந்தனைசெய்து வழிபடுதலைக்கோல்
புண்ணியநன்னீர் பொற்குடத்தேந்தி
மண்ணியபின்னர் மாலையணிந்து
நலந்தருநாளாற் பொலம்பூணோடை
அரசுவாத்தடக்கையிற் பரசினர்கொண்டு
முரசெழுந்தியம்பப் பல்லியமார்ப்ப
அரசொடுபட்ட வைம்பெருங்குழுவுந்
தேர்வலஞ்செய்து கவிகைக்கொடுப்ப
வூர்வலஞ்செய்து புகுந்துமுன்வைப்ப
இயல்பினின்வழாஅ விருக்கைமுறைமையின்
குயிலுவமாக்க ணெறிப்படநிற்ப
வலக்கான்முன்மிதித் தேறியரங்கத்து
வலத்தூண்சேர்தல் வழக்கெனச்சேர்ந்து
இந்நெறிவகையா லிடத்தூண்சேர்ந்த
தொன்னெறியியற்கைத் தோரியமகளிருஞ்
சீரியல்பொலிய நீரல்நீங்க
வாரமிரண்டும் வரிசையிற்பாடப்

பாடியவாரத்தி னீற்றினின்றிசைக்குங்
கூடியகுயிலுவக் கருவிகளெல்லாங்
குழல்வழிநின்றது யாழேயாழ்வழித்
தண்ணுமைநின்றது தகவேதண்ணுமைப்
பின்வழிநின்றது முழவேமுழவொடு
கூடிநின்றிசைத்த தாமந்திரிகை
ஆமந்திரிகையோ டந்தரமின்றிக்
கொட்டிரண்டுடையதோர் மண்டிலமாகக்
கட்டியமண்டிலம் பதினொன்றுபோக்கி
வந்தமுறைமையின் வழிமுறைவழா அமல்
அந்தரக்கொட்டுட னடங்கியபின்னர்
மீத்திறம்படாமை வக்காணம்வகுத்துப்
பாற்படநின்ற பாலைப்பண்மேல்
நான்குடனெறீஇய நன்கனமறிந்து
மூன்றளந்தொன்று கொட்டியதனை
ஐந்துமண்டலத்தாற் கூடைபோக்கி
வந்தவாரம்வழி மயங்கியபின்றை
ஆறுநாலு மம்முறைபோக்கிக்
கூறியவைந்தின் கொள்கைபோலப்
பின்னையுமம்முறை பெயரியபின்றைப்
பொன்னியல்பூங்கொடி புரிந்துடன்வகுத்து
நாட்டியநன்னூ னன்குகடைப்பிடித்துக்
காட்டினளாதலிற் காவல்வேந்தன்
இலைப்பூங்கோதை யியல்பின்வழாமற்
றலைக்கோலெய்தித் தலையரங்கேறி
விதிமுறையாக வாயிரத்தெண்கழஞ்
சொருமுறையாகப் பெற்றனளதுவே
நூற்றுப்பத்தடுக்கி யெட்டுக்கடைநிறுத்த
வீறுயர்பசும்பொன் பெறுவதிம்மாலை
மாலைவாங்குநர் சாலுநங்கொடிக்கென
மானமர்நோக்கியோர்கூனிகைக்கொடுத்து
நகரநம்பியர் திரிதருமறுகிற்
பகர்வனபோல்வதோர் பான்மையினிறுத்த

மாமலர்நெடுங்கண் மாதவிமாலை
கோவலன்வாங்கிக் கூனிதன்னொடு
மணமனைபுக்கு மாதவிதன்னொடு
அணைவுறவைகலி னயர்ந்தனன்மயங்கி
விடுதலறியா விருப்பினனாயினன்
வடுநீங்குசிறப்பிற்றன் மனையகமறந்தென. (௧)

நேரிசைவெண்பா.

எண்ணுமெழுத்து மியலைந்தும்பண்ணான்கும்
பண்ணின்றகூத்துப் பதினொன்றும்—மண்ணின்மேல்
போக்கினாள்பூம்புகார்ப் பொற்றொடிமாதவிதன்
வாக்கினாலாடரங்கில் வந்து. (௨)

அரங்கேற்றுக்காதை முற்றிற்று.

---

நான்காவது.

## அந்திமாலைச்சிறப்புசெய்காதை

(*)

விரிக்திர்பரப்பி யுலகமுழுதாண்ட
ஒருதனித்திகிரி யுரவோற்காணேன்
அங்கண்வானத் தணிநிலாவிரிக்குந்
திங்களஞ்செல்வன் யாண்டுளன்கொல்லெனத்
திசைமுகம்பசந்து செம்மலர்க்கண்கள்
முழுநீர்வார முழுமெயும்பனித்துத்
திரைநீராடை யிருநிலமடந்தை
அரசுகெடுத்த லமருமல்லற்காலை
கறைகெழுகுடிகள் கைதலைவைப்ப
அறைபோகுகுடிக ளொருதிறம்பற்றி
வலம்படுதானை மன்னரில்வழிப்
புலங்கெடவிறுத்த விருந்தின்மன்னரிற்
றாழ்துணைதுறந்தோர் தனித்துயரெய்தக்
காதலர்ப்புணர்ந்தோர் களிமகிழ்வெய்தக்
குழல்வளர்முல்லையிற் கோவலர்தம்மொடு
மழலைத்தும்பி வாய்வைத்தூத

அறுகாற்குறும்பெறிந் தரும்பொதிவாசம்
சிறுகாற்செல்வன் மறுகிற்றூற்ற
எல்வளைமகளிர் மணிவிளக்கெடுப்ப
மல்லன்மூதூர் மாலைவந்திறுத்தென
வினையாராயினும் பகையரசுகடியுஞ்
செருமாண்டென்னர் குலமுதலாதலின்
அந்திவானத்து வெண்பிறைதோன்றிப்
புன்கண்மாலைக் குறும்பெறிந்தோட்டிப்
பான்மையிற்றிரியாது பாற்கதிர்பரப்பி
மீனரசாண்ட வெள்ளிவிளக்கத்து
இல்வளர்முல்லையொடு மல்லிகையவிழ்ந்த
பல்பூஞ்சேக்கைப் பள்ளியிற்பொலிந்து
செந்துகிர்க்கோவை சென்றேந்தல்குல்
அந்துகின்மேகலை யசைந்தனவருத்த
நிலவுப்பயன்கொள்ளு நெடுவெண்முற்றத்துக்
கலவியும்புலவியுங் காதலற்களித்தாங்
கார்வநெஞ்சமொடு கோவலற்கெதிரிய
கோலங்கொண்ட மாதவியன்றியுங்
குடதிசைமருங்கின் வெள்ளயிர்தன்னொடு
குணதிசைமருங்கிற் காரகிறுறந்து
வடமலைபிறந்த வான்கேழ்வட்டத்துத்
தென்மலைபிறந்த சந்தனமறுகத்
தாமரைக்கொழுமுறித் தாதுபடுசெழுமலர்
காமருகுவளை கழுநீர்மாமலர்
பைந்தளிர்ப்படலை பருஉக்காழாரம்
சுந்தரச்சுண்ணத் துகளொடும்அளைஇச்
சிந்துபுபரிந்த செழும்பூஞ்சேக்கை
மந்தமாருதத்து மயங்கினர்மலிந்தாங்
காவியங்கொழுன ரகலத்தொடுங்கிக்
காவியங்கண்ணார் களிதுயிலெய்தவும்
அஞ்செஞ்சீறடி யணிச்சிலம்பொழிய
மென்றுகிலல்குன் மேகலைநீங்கக்
கொங்கைமுன்றிற் குங்குமமெழுதாள்

மங்கலவணியிற் பிறிதணியணியாள்
கொடுங்குழைதுறந்து வடிந்துவீழ்காதினள்
திங்கள்வாண்முகஞ் சிறுவியர்ப்பிரியச்
செங்கயனெடுங்க ணஞ்சனமறப்பப்
பவளவாணுதற் றிலதமிழப்பத்
தவளவாணகை கோவலனிழப்ப
மையிருங்கூந்த னெய்யணிமறப்பக்
கையறுநெஞ்சத்துக் கண்ணகியன்றியும்
காதலர்ப்பிரிந்த மாதர்நோதக
ஊதுலைக்குருகி னுயிர்த்துஎம்மெம்பி
வேனிற்பள்ளி மேவாதுகழிந்து
கூதிர்ப்பள்ளிக் குறுங்கணடைத்து
மலையத்தாரமு மணிமுத்தாரமும்
அலர்முலையாகத் தடையாதுவருந்தத்
தாழிக்குவளையொடு தண்செங்கழுநீர்
வீழிப்பூஞ்சேக்கை மேவாதுகழியத்
துணைபுணரன்னத் தூவியிற்செறிந்த
இணையணைமேம்படத் திருந்துதுயில்பெறாஅ
துடைப்பெருங்கொழுனரோ டேற்காலத்
திடைக்குமிழெறிந்து கடைக்குழையோட்டிக்
கலங்காவுள்ளங் கலங்கக்கடைசிவந்து
விலங்குநிமிர்நெடுங்கண் புலம்புமுத்துறைப்பவும்
அன்னமென்னடை நன்னீர்ப்பொய்கை
ஆம்பனாறுந் தேம்பொதிநறுவிரைத்
தாமரைச்செவ்வாய் தண்ணறற்கூந்தற்
பாண்வாய்வண்டு நேர்திறம்பாடக்
காமருகுவளைக் கண்மலர்விழிப்பப்
புள்வாய்முரசமொடு பொறிமயிர்வாரணத்து
முள்வாய்ச்சங்க முறைமுறையார்ப்ப
உரவுநீர்ப்பரப்பி னூர்துயிலெடுப்பி
இரவுத்தலைப்பெயரும் வைகறைகாறும்
அரையிருள்யாமத்தும் பகலுந்துஞ்சான்
விரைமலர்வாளியொடு கருப்புவில்லேந்தி

மகரவெல்கொடி மைந்தன்றிரிதரு
நகரங்காவ னணிசிறந்ததுவென. (க)

வெண்பா.

கூடினார்பானிழலாய்க் கூடார்பால்வெய்யதாய்க்
காவலன்வெண்குடைபோற் காட்டிற்றே-பூவலரின்
மாதவிக்குங்கண்ணகிக்கும் வானூர்மதிவிரிந்து
போதவிழ்க்குங்கங்குற் பொழுது. (க)

அந்திமாலைச்சிறப்புச்செய்காதை
முற்றிற்று.

# இந்திரன்விழவூரெடுத்தகாதை.

அலைநீராடை மலைமுலையாகத்
தாரப்பேரியாற்று மாரிக்கூந்தல்
கண்ணகன்பரப்பின் மண்ணகமடந்தை
புதையிருட்படாம் போகநீக்கி
உதையமால்வரை யுச்சிதோன்றி
உலகுவிளங்கவிரொளி மலர்கதிர்பரப்பி
வேயாமாடமும் வியன்கலனிருக்கையும்
மான்கட்காலதர் மாளிகையிடங்களும்
கயவாய்மருங்கிற் காண்போர்த்தடுக்கும்
பயன்றரவறியா யவனரிருக்கையும்
கலந்தருதிருவிற் புலம்பெயர்மாக்கள்
கலந்திருந்துறையு மிலங்குநீர்வரைப்பும்
வண்ணமுஞ்சுண்ணமுந் தண்ணறுஞ்சாந்தமும்
பூவும்புகையு மேவியவிரையும்
பகர்வனர்திரிதரு நகரவீதியும்
பட்டினுமயிரினும் பருத்திநூலினுங்
கட்டுநுண்வினைக் காருகரிருக்கையும்
ஆரமுமகிலுந் தூசுந்துகிரும்

மாசறுமுத்து மணியும்பொன்னும்
அருங்கலவெறுக்கையோ டளந்துகடையறியா
வளந்தலைமயங்கிய நனந்தலைமறுகும்
பால்வேறுதெரிந்த பகுதிப்பண்டமொடு
கூலங்குவித்த கூலவீதியும்
காழியர்கூவியர் கண்ணொடையாட்டியர்
மீன்விலைப்பரதவர் வெள்ளுப்புப்பகருநர்
பாசவர்வாசவர் பன்னிணவிலைஞரோ
டோசுனர்செறிந்த வூன்மலியிருக்கையும்
கஞ்சகாரருஞ் செம்பின்செய்ஞ்ஞரும்
மரங்கொறச்சருங் கருங்கைக்கொல்லரும்
கண்ணுள்வினைஞரு மண்ணீட்டாளரும்
பொன்செய்புலவரு நன்கலந்தருநரும்
துன்னகாரருந் தோலின்றுன்னரும்
கிழியினுங்கிடையினுந் தொழில்பலபெருக்கிப்
பழுதில்செய்வினைப் பால்கெழுமாக்களும்
குழலினும்யாழினுங் குரன்முதலேழும்
வழுவின்றிசைத்து வழித்திறங்காட்டும்
அரும்பெறன்மரபிற் பெரும்பாணிருக்கையும்
சிறுகுறுங்கைவினைப் பிறவினையாளரொடு
மறுவின்றிவிளங்கிய மருவூர்ப்பாக்கமும்
கோவியன்வீதியுங் கொடித்தேர்வீதியும்
பீடிகைத்தெருவும் பெருங்குடிவணிகர்
மாடமறுகு மறையோரிருக்கையும்
வீழ்குடியுழவரோடு விளங்கியகொள்கை
ஆயுள்வேதருங் காலக்கணிதரும்
பால்வகைதெரிந்த பன்முறையிருக்கையும்
திருமணிகுயிற்றினர் சிறந்தகொள்கையோ
டணிவளைபோழுநர் தம்பெருவீதியும்
சூதர்மாகதர் வேதாளியரொடு
நாழிகைக்கணக்கர் நலம்பெறுகண்ணுளர்
காவற்கணிகைய ராடற்கூத்தியர்
பூவிலைமடந்தைய ரேவற்சிலதியர்

பயிலெழிற்குயிலுவர் பன்முறைக்கருவியர்
நகைவேழம்பரொடு வகைதெரியிருக்கையும்
கடும்பரிகடவுநர் களிற்றின்பாகர்
நெடுந்தேரூருநர் கடுங்கண்மறவர்
இருந்துபுறஞ்சுற்றிய பெரும்பாயிருக்கையும்
பீடுகெழுசிறப்பிற் பெரியோர்பல்கிய
பாடல்சால்சிறப்பிற் பட்டினப்பாக்கமும்
இருபெருவேந்தர் முனையிடம்போல
இருபாற்பகுதியி னிடைநிலமாகக்
கடைகால்யாத்த மிடைமாச்சோலை
கொடுப்போரோதையுங் கொள்வோரோதையும்
நடுக்கின்றிநிலைஇய நாளங்காடியிற்
சித்திரைச்சித்திரை திங்கட்சேர்ந்தென
வெற்றிவேன்மன்னற் குற்றதையொழிக்கெனத்
தேவர்கோமா னேவலிற்போந்த
காவற்பூதத்துக் கடைகெழுபீடிகைப்
புழுக்கலுநொலையலும் விழுக்குடைமடையும்
பூவும்புகையும் பொங்கலுஞ்சொரிந்து
துணங்கையர்குரவைய ரணங்கெழுந்தாடிப்
பெருநிலமன்னர்க் கிருநிலமடங்கலும்
பசியும்பிணியும் பகையுநீங்கி
வசியும்வளனும் சுரக்கெனவாழ்த்தி
மாதர்க்கோலத்து வலவையினுரைக்கு
மூதிர்ப்பெண்டி ரோதையிற்பெயர
மருவூர்மருங்கின் மறங்கொள்வீரரும்
பட்டினமருங்கிற் படைகெழுமாக்களும்
முந்தச்சென்று முழுப்பலிபீடிகை
வெந்திறமன்னற் குற்றதையொழிக்கெனப்
பலிக்கொடைபுரிந்தோர் வலிக்குவரம்பாகெனக்
கல்லுமிழ்கவணினர் கழிப்பிணிக்கறைத்தோற்
பல்வேற்பரப்பினர் மெய்யுறத்தீண்டி
ஆர்த்துக்களங்கொண்டோ ராமாழுவத்துச்
சூர்த்துக்கடைசிவந்தசுடுநோக்குக்கருந்தலை

வெற்றிவேந்தன் கொற்றங்கொள்கென
நற்பலிபீடிகை நலங்கொளவைத்தாங்
குயிர்ப்பலியுண்ணு முருமுக்குரன்முழக்கத்து
மயிர்க்கண்முரசொடு வான்பலியூட்டி
இருநிலமருங்கிற் பொருநரைப்பெறாஅச்
செருவெங்காதலிற் றிருமால்வளவன்
வாளுங்குடையு மயிர்க்கண்முரசும்
நாளொடுபெயர்த்து நண்ணார்ப்பெறுகவிம்
மண்ணகமருங்கினென் வலிகெழுதோளெனப்
புண்ணியத்திசைமுகம் போகியவந்நாள்
அசைவிலூக்கத்து நசைபிறக்கொழியப்
பகைவிளங்கியதிப் பயங்கெழுமலையென
இமையோருறையுஞ் சிமையப்பிடர்த்தலைக்
கொடுவரியேற்றிக் கொள்கையிற்பெயர்வோர்க்கு
மாநீர்வேலி வச்சிரநன்னாட்டுக்
கோனிறைகொடுத்த கொற்றப்பந்தரும்
மகதநன்னாட்டு வாள்வயவேந்தன்
பகைப்புறத்துக்கொடுத்த பட்டிமண்டபமும்
அவந்திவேந்தனும் வந்தனன்கொடுத்த
நிவந்தோங்குமரபிற் றோரணவாயிலும்
பொன்னினுமணியினும் புனைந்தனவாயினும்
நுண்வினைக்கம்மியர் காணாமரபின்
துயர்நீங்குசிறப்பிற் றொல்லோருதவிக்கு
மயன்விதித்துக்கொடுத்த மரபினவாயினும்
ஒருங்குடன்புணர்ந்தாங் குயர்ந்தோரேத்தும்
அரும்பெறன்மரபின் மண்டபமன்றியும்
வம்பமாக்க டம்பெயர்பொறித்துக்
கண்ணெழுத்துப்படுத்த வெண்ணுப்பலபொதி
கடைமுகவாயிலுங் கருந்தாட்காவலும்
உடையோர்காவலு மொரீஇயதாகிக்
கட்பொருளரெனிற் கடுப்புத்தலையேற்றிக்
கொட்பினல்லது கொடுத்தலின்மையா
துள்ளுநர்பனிக்கும் வெள்ளிடைமன்றமும்

கூனுங்குறளு மூமுஞ்செவிடும்
அழுகுமெய்யாளரு முழுகினராடிப்
பழுதில்காட்சிநன் னிறமும்பெற்று
வலஞ்செயாக்கழியு மிலஞ்சிமன்றமும்
வஞ்சமுண்டு மயற்பகையுற்றோர்
நஞ்சமுண்டு நடுங்குதுயருற்றோர்
அழல்வாய்நாகத் தாரெயிறழுந்தினர்
கழல்கட்கூளிக் கடுநவைப்பட்டோர்
சுழலவந்து தொழத்துயர்நீங்கும்
நிழல்கானெடுங்க ணின்றமன்றமும்
தவமறைந்தொழுகுந் தன்மையிலாளர்
அறமறைந்தொழுகு மல்லவைப்பெண்டிர்
அறைபோகமைச்சர் பிறர்மனைநயப்போர்
பொய்க்கரியாளர் புறங்கூற்றாளரெனக்
கைக்கொள்பாசத்துக் கைப்படுவோரெனக்
காதநான்குங் கடுங்குரலெழுப்பிப்
பூதம்புடைத்துணும் பூதசதுக்கமும்
அரசுகோல்கோடினு மறங்கூறவையத்
துரைநூல்கோடி யொருதிறம்பற்றினும்
நாவொடுநவிலாது நவைநீருகுத்துப்
பாவைநின்றழூஉம் பாவைமன்றமும்
மெய்வகையுணர்ந்த விழுமியோரேத்தும்
ஐவகைமன்றத் தரும்பலியுறீஇ
வச்சிரக்கோட்டத்து மணங்கெழுமுரசம்
கச்சையானைப் பிடர்த்தலையேற்றி
வால்வெண்களிற்றரசு வழங்கியகோட்டத்துக்
கால்கொள்விழவின் கடைநிலைசாற்றித்
தங்கியகொள்கைத் தருநிலைக்கோட்டத்து
மங்கலநெடுங்கொடி வானுறவெடுத்து
மரகதமணியொடு வயிரங்குயிற்றிய
பவளத்திரள்காற் பசும்பொன்வேதிகை
நெடுநிலைமாடக் கடைமுகத்தியாங்கணும்
கிம்புரிப்பகுவாய்க் கிளர்முத்தொழுக்கத்து

மங்கலம்பொறித்த மகரவாசிகைத்
தோரணநிலைஇய தோமறுபசும்பொற்
பூரணகும்பத்துப் பொலிந்தபாலிகைப்
பாவைவிளக்கிற் பசும்பொற்படாத்தைத்
தூமயிற்கவரிச் சுந்தரச்சுண்ணத்து
மேவியகொள்கை வீதியிற்சிறந்தாங்
கைம்பெருங்குழுவு மெண்பெயராயமு
மரசகுமாரரும் பரதகுமாரரும்
கவர்பரிப்புரவியர் களிற்றின்றொகுதியர்
இவர்பரித்தேரின ரியைந்தொருங்கீண்டி
அரசுமேம்படீஇ யகநிலைமருங்கின்
உரைசான்மன்னன் கொற்றங்கொள்கென
மாயிருஞாலத்து மன்னுயிர்காக்கும்
ஆயிரத்தோரெட் டரசுதலைக்கொண்ட
தண்ணறுங்காவிரித் தாதுமலிபெருந்துறைப்
புண்ணியநன்னீர் பொற்குடத்தேந்தி
மண்ணகமருள வானகம்வியப்ப்
விண்ணவர்தலைவனை விழுநீராட்டிப்
பிறவாயாக்கைப் பெரியோன்கோயிலும்
அறுமுகச்செவ்வே ளணிதிகழ்கோயிலும்
வால்வளைமேனி வாலியோன்கோயிலும்
நீலமேனி நெடியோன்கோயிலும்
மாலைவெண்குடை மன்னவன்கோயிலும்
மாமுதுமறையோன் வாய்மையின்வழாஅ
நான்மறைமரபிற் றீமுறையொருபால்
நால்வகைத்தேவரு மூவாறுகணங்களும்
பால்வகைதெரிந்த பரிதித்தோற்றத்து
வேறுவேறுகடவுளர் சாறுசிறந்தொருபால்
அறவோர்பள்ளி யறனோம்படையும்
புறநிலைக்கோட்டத்துப் புண்ணியத்தானமும்
துறவோருரைக்குஞ் செயல்சிறந்தொருபால்
கொடித்தேர்வேந்தனொடு கூடாமன்னர்
அடித்தளைநீக்கு மருள்சிறந்தொருபால்

கண்ணுளாளர் கருவிக்குயிலுவர்
பண்ணியாழ்ப்புலவர் பாடற்பாணரொ
டெண்ணருஞ்சிறப்பி னிசைசெறிந்தொருபால்
முழவுக்கண்டுயிலாத முடிக்கரும்வீதியும்
விழவுக்களிசிறந்த வியலுளாங்கட்
காதற்கொழுநனைப் பிரிந்தலரெய்தா
மாதர்க்கொடுங்குழை மாதவிதன்னொ
டில்வளர்முல்லை மல்லிகைமயிலை
தாழிக்குவளையொடு தண்செங்கழுநீர்
பயில்பூங்கோதை பிணையலிற்பொலிந்து
காமக்களிமகிழ் வெய்திக்காமர்
பூம்பொதிநறுவிரைப் பொழிலாட்டயர்ந்து
நாண்மகிழிருக்கை நாளங்காடிப்
பூமலிகானத்துப் புதுமணம்புக்குப்
புகையுஞ்சாந்தும் புலராதுசிறந்த
நகையாடாயத்து நன்மொழிதிளைத்துக்
குரல்வாய்ப்பாண ரொடுநகரப்பரதரொடுந்
திரிதருமரபிற் கோவலன்போல
இளிவாய்வண்டினொ டின்னிளவேனிலொடு
மலையமாருதந் திரிதருமருகிற்
கருமுகில்சுமந்து குறுமுயலொழித்தாங்
கிருகருங்கயலோ டிடைக்குமிழெழுதி
அங்கண்வானத் தரவுபகையஞ்சித்
திங்கண்மீண்டு திரிதருங்கொல்லென
நீர்வாய்த்திங்க ணீணிலத்தமிர்தின்
சீர்வாய்த்துவலைத் திருநீர்மாந்தி
மீனேற்றுக்கொடியோன் மெய்பெறவளர்த்த
வானவில்லின் வருதலுமவ்வழி
இருநிலமன்னற்குப் பெருவளங்காட்டத்
திருமகள்புகுந்ததிச் செழும்பதியாமென
எரிநிறத்திலவ முல்லையுமன்றியுங்
கருநெடுங்குவளையுங் குமிழம்பூத்தாங்
குள்வரிக்கோலத் துறுதுணைதேடிக்

கள்ளக்கமலந் திரிதலுமுண்டுகொல்
மன்னவன்செங்கோன் மறுத்தலஞ்சிப்
பல்லுயிர்பருகும் பகுவாய்க்கூற்றம்
ஆண்மையிற்றிரிந்துதன் னருந்தொழிறிரியாது
நாணுடைக்கோலத்து நகைமுகங்காட்டிப்
பண்மொழிநரம்பிற் றிவவியாழ்மிழற்றிப்
பெண்வயிற்றிரியும் பெற்றியுமுண்டுகொல்
உருவிலாள னொருபெருஞ்சேனை
இகலமராட்டிய வெதிர்நின்றுவிலங்கியவர்
எழுதுவரிக்கோலமு முழுமெயுமுறீஇ
விருந்தொடுபுக்க பெருந்தோட்கணவருடன்
உறைவுமரீஇய வொழுக்கொடுபுணர்ந்த
வடமீன்கற்பின் மனையுறைமகளிர்
மாதர்வாண்முகத்து மணித்தோட்டுக்குவளைப்
போதுபுறங்கொடுத்துப் போகியசெங்கடை
விருந்திற்றீர்ந்தில தாயினயாவதும்
அருந்துந்தருங்கொலிம் மாநிலவரைப்பெனக்
கையற்றுநடுங்கு நல்வினைநடுநாள்
உள்ளகநறுந்தா தகநிறைநிறைந்து
கள்ளுகநடுங்குங் கழுநீர்போலக்
கண்ணகிசெங்கணு மாதவிகருங்கணும்
உண்ணிறைகாந்தத் தொளித்துநீருகுத்தன
எண்ணுமுறையிடத்தினும் வலத்தினுந்துடித்தன
விண்ணவர்கோமான் விழவுநாளகத்தென.

---

வாரமுடையதிறல் வானவர்கோ னுக்கெனவே
ஓரமுடையோ ருயிரிழப்ப—வீர
முழவெடுத்த பேரொலியான் மூவுலகோ ரேத்த
விழவெடுத்தான் பூம்புகார் வேந்து. (ரு)

இந்திரன் விழவூரெடுத்தகாதை

முற்றிற்று

---

# கடலாட்டுக்காதை

வெள்ளிமால்வரை வியன்பெருஞ்சேடிக்
கள்ளவிழ்பூம்பொழிற் காமக்கடவுட்குக்
கருங்கயனெடுங்கட் காதலிதன்னொடு
விருந்தாட்டயருமோர் விஞ்சையர்வீரன்
தென்றிசைமருங்கினோர் செழும்பதிதன்னுள்
இந்திரன்விழவுகொண் டெடுக்குநாளிதுவெனக்
கடுவிசையவுணர் கணங்கொண்டீண்டிக்
கொடுவரியூக்கத்துக் கோனகர்காத்த
தொடுகழன்மன்னற்குத் தொலைந்தனராகி
நெஞ்சிருள்கூர நிகர்த்துமேல்விட்ட
வஞ்சம்பெயர்த்த மாபெரும்பூதந்
திருந்துவேலண்ணற்குத் தேவரேவ
விருந்துபலியுண்ணு மிடமுங்காண்குவம்
அமராபதிகாத் தமரரிற்பெற்றுத்
தமரிற்றந்த தகைசால்சிறப்பிற்
பொய்வகையின்றிப் பூமியிற்புணர்ந்த
ஐவகைமன்றத் தமைதியுங்காண்குவம்
நாரதன்வீணை நயந்தெரிபாடலும்
தோரியமடந்தை வாரம்பாடலும்
ஆயிரங்கண்ணோன் செவியகநிறைய
நாடகவுருப்பசி நல்காளாகி
மங்கலமிழக்க வீணைமண்மிசைத்
தங்குகவிவளெனச் சாபம்பெற்ற
மங்கைமாதவி வழிமுதற்றோன்றிய
அரவகலல்கு லாடலுங்காண்குவம்
துவரிதழ்ச்செவ்வாய்த் துடியிடையோயே
அமரர்தலைவனை வணங்குதும்யாமெனச்
சிமையத்திமையமுஞ் செழுநீர்க்கங்கையும்
உஞ்சையம்பதியும் விந்தத்தடவியும்
வேங்கடமலையுந் தாங்கருவிளையுள்

காவிரிநாடுங் காட்டியபின்னர்
பூவிரிபடப்பைப் புகார்மருங்கெய்திச்
சொல்லியமுறைமையிற் றொழுதனன்காட்டி
மல்லன்மூதூர் மகிழ்விழாக்காண்போன்
மாயோன்பாணியும் வருணப்பூதர்
நால்வகைப்பாணியு நலம்பெறுகொள்கை
வானூர்மதியமும் பாடியபின்னர்ச்
சீரியல்பொலிய நீரனீங்கப்
பாரதியாடிய பாரதியரங்கத்துத்
திரிபுரமெரியத் தேவர்வேண்ட
எரிமுகப்பேரம் பேவல்கேட்ப
உமையவளொருதிற னாகவோங்கிய
இமையவனாடிய கொடுகொட்டியாடலும்
தேர்முனின்று திசைமுகன்காணப்
பாரதியாடிய வியன்பாண்டரங்கமும்
கஞ்சன்வஞ்சங் கடத்தற்காக
அஞ்சனவண்ண னாடியவாடலுள்
அல்லியத்தொகுதியு மவுணர்க்கடந்த
மல்லினாடலு மாக்கடனடுவண்
நீர்த்திரையரங்கத்து நிகர்த்துமுன்னின்ற
சூர்த்திறங்கடந்தோ னாடியதுடியும்
படைவீழ்ந்தவுணர் பையுளெய்தக்
குடைவீழ்த்தவர்முன் னாடியகுடையும்
வாணன்பேரூர் மறுகிடைநடந்து
நீணிலமளந்தோ னாடியகுடமும்
ஆண்மைதிரிந்த பெண்மைக்கோலத்துக்
காமனாடிய பேடியாடலும்
காய்சினவவுணர் கடுந்தொழில்பொறாஅள்
மாயவளாடிய மரக்காலாடலும்
செருவெங்கோல மவுணர்நீங்கத்
திருவின்செய்யோ ளாடியபாவையும்
வயலுழைநின்று வடக்குவாயிலுள்
அயிராணிமடந்தை யாடியகடையமும்

அவரவரணியுட னவரவர்கொள்கையின்
நிலையும்படிச்மு நீங்காமரபின்
பதினோராடலும் பாட்டின்பகுதியும்
விதிமாண்கொள்கையின் விளங்கக்காணுய்
தாதவிழ்பூம்பொழி லிருந்தியான்கூறிய
மாதவிமரபின் மாதவியிவளெனக்
காதலிக்குரைத்துக் கண்டுமகிழ்வெய்திய
மேதகுசிறப்பின் விஞ்சையனன்றியும்
அந்தரத்துள்ளோ ரறியுமரபின்
வந்துகாண்குறூஉம் வானவன்விழவும்
ஆடற்கோலமு மணியுங்கடைக்கொள
ஊடற்கோலமோ டிருந்தோனுவப்பப்
பத்துத்துவரினு மைந்துவிரையினும்
முப்பத்திருவகை யோமாலிகையினும்
ஊறியநன்னீ ருரைத்தநெய்வாசம்
நாறிருங்கூந்த னலம்பெறவாடிப்
புகையிற்புலர்த்திய பூமென்கூந்தலை
வகைபெறமான்மதச் செஞ்சேறாட்டி
அலத்தகமூட்டிய வஞ்செஞ்சீறடி
நலத்தகுமெல்விர னல்லணிசெறீஇப்
பரியகநூபுரம் பாடகஞ்சதங்கை
அரியகங்காலுக் கமைவுறவணிந்து
குறங்குசெறிதிரள் குறங்கினிற்செறித்துப்
பிறங்கியமுத்தரை முப்பத்திருகாழ்
நிறங்கிளர்பூந்துகி னீர்மையினுடீஇக்
காமர்கண்டிகை தன்னொடுமன்னிய
தூமணித்தோள்வளை தோளுக்கணிந்து
மத்தகமணியொடு வயிரங்கட்டிய
சித்திரச்சூடகஞ் செம்பொற்கைவளை
பரியகம்வால்வளைப் பவளப்பல்வளை
அரிமயிர்முன்கைக் கமைவுறவணிந்து
வாளைப்பகுவாய் வணங்குறுமோதிரங்
கேழ்கிளர்செங்கேழ் கிளர்மணிமோதிரம்

வாங்குவயிரத்து மரகதத்தாள்செறீஇக்
காந்தண்மெல்விரல் காப்பவணிந்து
சங்கிலிநுண்டொடர் பூண்ஞாண்புனைவினை
அங்கழுத்தகவையி னாரமோடணிந்து
கயிற்கடையொழுகிய காமர்தூமணி
செயத்தகுகோவையிற் சிறுபுறமறைத்தாங்,
கிந்திரநீலத் திடையிடைதிரண்ட
சந்திரபாணித் தகைமணிக்கடிப்பிணை
அங்காதகவையி னழகுறவணிந்து
தெய்வவுத்தியொடு செழுநீர்வலம்புரி
தொய்யகம்புல்லகந் தொடர்ந்ததலைக்கணி
மையீரோதிக்கு மாண்புறவணிந்து
கூடலுமூடலுங் கோவலற்களித்துப்
பாடமைசேக்கைப் பள்ளியுளிருந்தோள்
உருகெழுமூதூ ருவாத்தலைவந்தெனப்
பெருநீர்போகு மிரியன்மாக்களொடு
மடலவிழ்கானற் கடல்விளையாடற்
காண்டல்விருப்பு வேண்டினளாகப்
பொய்கைத்தாமரைப் புள்வாய்புலம்ப
வைகறையாமம் வாரணங்காட்ட
வெள்ளிவிளக்க நள்ளிருட்கடியத்
தாரணிமார்பனொடு பேரணியணிந்து
வானவண்கைய னத்திரியேற
மானமர்நோக்கி வையமேறிக்
கோடிபலவடுக்கிய கொழுநிதிக்குப்பை
மாடமலிமறுகிற் பீடிகைத்தெருவின்
மலரணியொழுக்கத்து மணிவிளக்கெடுத்தாங்
கலர்கொடியறுகு நெல்லும்வீசி
மங்கலத்தாசியர் தங்கலனொலிப்ப
இருபுடைமருங்கினுந் திரிவனபெயரும்
திருமகளிருக்கைச் செவ்வனங்கழிந்து
மகரவாரி வளந்தந்தோங்கிய
நகரவீதி நடுவுட்போகிக்

கலந்தருதிருவிற் புலம்பெயர்மாக்கள்
கலந்திருந்துறையு மிலங்குநீர்வரைப்பின்
வேலைவாலுகத்து விரிகதிர்பரப்பிய
கூல்மறுகிற் கொடியெடுத்துநுவலும்
மாலைச்சேரி மருங்குசென்றெய்தி
வண்ணமுமலருஞ் சுண்ணமுஞ்சாந்தமும்
பண்ணியப்பகுதியும் பகர்வோர்விளக்கமும்
செய்வினைக்கம்மியர் கைவினைவிளக்கமும்
காழியர்மோதகத் தூழுறுவிளக்கமும்
கூவியர்காரகல் குடைக்கால்விளக்கமும்
நொடைநவின்மகடூஉக் கடைகெழுவிளக்கமும்
இடையிடைமீன்விலை பகர்வோர்விளக்கமும்
இலங்குநீர்வரைப்பிற் கலங்காண்விளக்கமும்
விலங்குவலைப்பரதவர் மீன்றிமில்விளக்கமும்
மொழிபெயரிடத்தோ ரொழியாவிளக்கமும்
கழிபெரும்பண்டங் காவலர்விளக்கமும்
நுண்வினைக்கம்மியர் செய்வினைவிளக்கமும்
எண்ணுவரம்பறியா விசைந்தொருங்கீண்டி
இடிக்கலப்பன்ன விளையிருமறுகிற்
கடிப்பகைகாணுங் காட்சியதாகிய
விளைமலர்த்தாமரை வேலிநீர்ப்பரப்பின்
மருதவேலியின் மாண்புறத்தோன்றும்
கைதைவேலி நெய்தலங்கானற்
பொய்தலாயமொடு பூங்கொடிபொருந்தி
நிரைநிரையெடுத்த புரைதீர்காட்சிய
மலைப்பஃறாரமுங் கடற்பஃறாரமும்
வளந்தலைமயங்கிய துளங்கலிருக்கையும்
அரசிளங்குமரரு முரிமைச்சுற்றமும்
பரதகுமாரரும் பல்வேறாயமும்
ஆடுகளமகளிரும் பாடுகளமகளிருந்
தொடுகொண்மருங்கிற் சூழ்காலெழுனியும்
விண்பொருபெரும்புகழ்க் கரிகால்வளவன்
தண்பதங்கொள்ளுந் தலைநாட்போல

வேறுவேறுகோலத்து வேறுவேறுகம்பலை
சாறுபெறுகளத்தின் வீறுபெறத்தோன்றிக்
கடற்கரைமெலிக்குங் காவிரிப்பேரியாற்
றிடங்கெடவீண்டிய நால்வகைவருணத்
தடங்காக்கம்பலை யடங்கியைந்தொலிப்பக்
கடற்புலவுகடிந்த மடற்பூந்தாழை
சிறைசெய்வேலி யகவையினாங்கோர்
புன்னைநீழற் புதுமணற்பரப்பின்
ஓவியவெழினி சூழ்வுடன்போக்கி
விதானித்துப்படுத்த வெண்காலமளிமிசை
வருந்துபுநின்ற வசந்தமாலைகைத்
திருந்துபுநல்யாழ் செவ்வனம்வாங்கிக்
கோவலன்றன்னொடு கொள்கையினிருந்தனள்
மாமலர்நெடுங்கண் மாதவிதானென. (௧)

---

சேவலொடுதுயின்ற மணிவண்டுகாலைக்
களிநிறவண்டா துதிர்ப்பத்தோன்றிற்றே
காமர்தெளிநிறவெங் கதிரோன்றேரோ.

கடலாட்டுக்காதை
முற்றிற்று.

---

## கானல் வரி.

சித்திரப்படத்துட்புக்குச் செழுங்கோட்டுமலர்புனைந்து
மைத்தடங்கண்மணமகளிர் கோலம்போல்வனப்பெய்த
பத்தருங்கோடு மணியுநரம்புமென்
றித்திறத்துக்குற்றநீங்கி யாழ்கையிற்றொழுதுவாங்கி
பண்ணல்பரிவட்டணை யாராய்தறைவரல்
கண்ணியசெலவு விளையாட்டுக்கையூழ்
நண்ணியகுறும்போக் கென்றுநாட்டிய

எண்வகையா லிசையெழீஇப்
பண்வகையாற்பரிவுதீர்ந்து
மரகதமணிக்காழ் செறிந்தமணிக்காந்தண்மெல்
விரல்கள்பயிர வண்டின்கிளைபோல
பண்ணாரம்பின் மிசைபடர
வார்தல்வடித்த லுந்தலுறழ்தல்
சீருடனுருட்ட றெருட்டலெள்ளல்
ஏருடைப் பட்டடையென
இசையோர்வகுத்த வெட்டுவகையின்
இசைகரணத்துப் பட்டவகைசெவியோரீஇ
ஏவலன்பின் பணியாதெனக்
கோவலன்கையாழ் நீட்டவவனுங்
காவிரியைநோக்கின வுங்கடற்கானல்வரிப்
பாணியுமாதவி தன்மனமகிழ
வாசித்தெருடங்குமன்னே. (க)

1. திங்கண்மாலைவெண்குடையான்சென்னிசெங்கோலதுவோச்சி
கங்கைதன்னைப்புணர்ந்தாலும் புலவாய்வாழிகாவேரி [க்
கங்கைதன்னைப்புணர்ந்தாலும் புலவாதொழிதல்கயற்கண்ணாய்
மங்கைமாதர்பெருங்கற்பென் றறிந்தேன்வாழிகாவேரி.

2. மன்னுமாலைவெண்குடையான் வளையச்செங்கோலதுவோச்சி
கன்னிதன்னைப்புணர்ந்தாலும் புலவாய்வாழிகாவேரி [க்
கன்னிதன்னைப்புணர்ந்தாலும் புலவாதொழிதல்கயற்கண்ணாய்
மன்னுமாதர்பெருங்கற்பென் றறிந்தேன்வாழிகாவேரி.

3. உழவரோதைமதகோதை யுடைநீரோதைதண்பதங்கொள்
விழவரோதைசிறந்தார்ப்ப நடந்தாய்வாழிகாவேரி
விழவரோதைசிறந்தார்ப்ப நடந்தவெல்லாம்வாய்காவா
மழவரோதைவளவன்றன் வளனேவாழிகாவேரி. (உ)

(இவை மூன்றும் ஆற்றுவரி.)

1. மோதுமுதுதிரையான்மொத்துண்டுபோந்தசைந்த முரல்வாய்ச்சங்கம், மாதர்வரிமணன்மேல்வண்டலுழுதழிப்பமாழ்கியைய, கோதைபரிந்தசையமெல்விரலாற்கொண்டோச்சுங்குவளைமாலைப், போது*புறங்கணிப்பப்போவார்கண்போகாப் புகாரேயெம்மூர்.

* "சிறங்கணிப்ப" எனவும்பாடம்.

2. காதலராகிக்கழிகானற்கையுறைகொண் டென்பின்வந்தார்
ஏதிலர்தாமாகியாமிரப்பநிற்பதையாங் கறிகோவைய
மாதரார்கண்ணுமதிநிழனீரிணைகொண்டு மலர்ந்தநீலப்
போதுமறியாதுவண்சேலாடும் புகாரேயெம்மூர்.

3. கரியமலர்நெடுங்கட்காரிகைமுன்கடற்றெய்வங் காட்டிக்காட்டி
அரியசூள்பொய்த்தாரறனிலரென்றேழையம்யாங் கறிகோவை
ய, விரிகதிர்வெண்மதியுமீன்கணமுமாமென்றே விளங்கும்வெ
ள்ளைப், புரிவளையுமுத்துங்கண்டாம்பல்பொதியவிழ்க்கும் புகா
ரேயெம்மூர். (௩)

(இவை மூன்றும் சார்த்துவரி.)

1. துறைமேய்வலம்புரிதோய்ந்துமணலுழுத தோற்றமாய்வான்
பொறைமலிபூம்புன்னைப்பூவுதிர்நுண்டாது போர்க்குங்கானல்
நிறைமதிவாண்முகத்துநேர் கயற்கண்செய்த [லும்.
உறைமலியுய்யாநோயூர்சுணங்குமென்முலையே தீர்க்கும்போ

2. நிணங்கொள்புலாலுணங்கனின்றுபுள்ளோப்புகாலைதலைக்கீடாக்
கணங்கொள்வண்டார்த்துலாங்கன்னி நறுஞாழல்கையினான்
மணங்கமழ்பூங் கானன்மன்னிமற்றுண்டோர் [றி
அணங்குறையுமென்பதறியேனறிவனே லடையேன்மன்னோ.

3. வலைவாழ்நர்சேரிவலையுணங்குமுன்றின்மலர்க்கையேந்தி
விலைமீனுணங்கல்பொருட்டாகவேண்டுருவங்கொண்டுவேறோர்
கொலைவேனெடுங்கட்கொடுங்கூற்றம்வாழ்தல்
லலைநீர்த்தண்கானலறியேனறிவனேலடையேன்மன்னோ. (௪)

---

கானல்வரி.

1. கயலெழுதிவில்லெழுதிக் காரெழுதிக்காமன்
செயலெழுதித்தீர்ந்த முகந்திங்களோகாணீர்
திங்களோகாணீர் திமில்வாணர்சீறூர்க்கே
அங்கணேர்வானத்தர வஞ்சிவாழ்வதுவே.

2. எறிவளைகளார்ப்ப விருமருங்குமோடும்
கறைகெழுவேற்கண்ணோ கடுங்கூற்றங்காணீர்
கடுங்கூற்றங்காணீர் கடல்வாணர்சீறூர்க்கே
மடங்கெழுமென்சாயன் மகளாயதுவே.

3. புலவுமீன்வெள்ளுணங்கல்புள்ளோப்பிக்கொண்டார்க்
கலவுநோய்செய்யு மணங்கிதுவோகாணீர்
அணங்கிதுவோகாணீ ரடும்பமர்தண்கானல்
பிணங்குநேரைம்பாலோர் பெண்கொண்டதுவே. (௫)

வேறு.

1. பொழிறருநறுமலரே புதுமணம்விரிமணலே
பழுதறுதிருமொழியே பணையிளவனமுலையே
முழுமதிபுரைமுகமே முரிபுருவவிலிணையே
எழுதரியமினிடையே யெனையிடர்செய்தவையே.

2. திரைவிரிதருதுறையே திருமணல்விரியிடமே
விரைவிரிதருமலரே மிடைதருபொழிலிடமே
மருவிரிபுரிகுழலே மதிபுரைதிருமுகமே
இருகயலிணைவிழியே யெனையிடர்செய்தவையே.

3. வளைவளர்தருமணலே மணம்விரிதருபொழிலே
தளையவிழ்நறுமலரே தனியவடிரியிடமே
முளைவளரிளநகையே முழுமதிபுரைமுகமே
இழைவளரிளமுலையே யெனையிடர்செய்தவையே. (௬)

வேறு.

1. கடல்புக்குயிர்கொன்று வாழ்வர்நின்னையர்
உடல்புக்குயிர்கொன்று வாழ்வைமன்னீயும்
மிடல்புக்கடங்காத வெம்முலையோர்பாரம்
இடர்புக்குமின்னிடை யிழவல்கண்டாய்.

2. கொடுங்கண்வலையா லுயிர்கொல்வர்நுந்தை
நெடுங்கண்வலையா லுயிர்கொல்வைமன்னீயும்
வடங்கொண்முலையான் மழைமின்னுப்போல
நுடங்கியுகுமென்னு சுப்பிழவல்கண்டாய்.

3. ஓடுந்திமில்கொண்டுயிர் கொல்வர்நின்னையர்
கோடும்புருவத்துயிர் கொல்வைமன்னீயும்
பீடும்பிறரெவ்வம்பாராய் முலைசுமந்து
வாடுஞ்சிறுமென் மருங்கிழவல்கண்டாய்.

வேறு.

4. பவளவுலக்கை கையாற்பற்றித்
தவளமுத்தங் குறுவாள்செங்கண்
தவளமுத்தங் குறுவாள்செங்கண்
குவளையல்ல கொடியகொடிய.

5. புன்னைநீழற் புலவுத்திரைவாய்
அன்னநடப்ப நடப்பாள்செங்கண்
அன்னநடப்ப நடப்பாள்செங்கண்
கொன்னேவெய்ய கூற்றங்கூற்றம்.

6. கள்வாய்நீலங் கையிலேந்திப்
புள்வாயுணங்கல் கடிவாள்செங்கண்
புள்வாயுணங்கல் கடிவாள்செங்கண்
வெள்வேலல்ல வெய்யவெய்ய.

7. சொன்மடவன்னஞ் சொன்னடையொவ்வா
ஊர்நீரோத மூழ்கித்திரிவாண்முன்
சொன்மடவன்னஞ் சொன்னடையொவ்வா. (எ)

(இவ்வேழும் திணைநிலவரி.)

கட்டுரை.

ஆங்குக்கானல்வரிப்பாட்டிற்பாணிகேட்டுவரிமானெடுங்கண்மாதவி
மன்னுமோர்குறிப்புண்டவன் றன்னிலைமயங்கினானெனக்
கலவியால்மகிழ்ந்தனள்போல் புலவியால்யாழ்வாங்கித்
தானுமோர்குறிப்பினள்போற் கானல்வரிப்பாட்டிற்பாணி
நிலத்தெய்வம்வியப்பெய்த நீணிலத்தோர்மனமகிழக்
கலத்தொடும்புணர்ந்தமைந்த கண்டத்தாற்பாடத்தொடங்குமன்.

1. மருங்குவண்டுசிறந்தார்ப்ப மணிப்பூவாடையதுபோர்த்துக்
கருங்கயற்கண்விழித்தொல்கி நடந்தாய்வாழிகாவேரி
கருங்கயற்கண்விழித்தொல்கி நடந்ததெல்லாநின்கணவன்
அறிந்துசெங்கோல்வளையாமை யறிந்தேன்வாழிகாவேரி.

2. பூவார்சோலைமயிலாலப் புனப்பூங்குயில்களிசைபாடக்
காமர்மாலையருகசைய நடந்தாய்வாழிகாவேரி
காமர்மாலையருகசைய நடந்ததெல்லாநின்கணவன்
நாமவேலினிறங்கண்டே யறிந்தேன்வாழிகாவேரி.

3. வாழியவன்றன்வளநாட்டின் மகவைவளர்க்குந்தாயாகி
ஊழியுய்க்கும்பேருதவி யொழியாய்வாழிகாவேரி
ஊழியுய்க்கும்பேருதவி யொழியாதொழுகலுலகோம்பும
ஆழியாள்வான்பகல்வெய்யோ னருளேவாழிகாவேரி. (கூ)

(இம்மூன்றும் ஆற்றுவரி.)

1. தீங்கதிர்வாண்முகத்தாள்செவ்வாய்மணி முறுவற்கொவ்வாவே
வாங்குநீர்முத்தென்றுவைகலுமாலமகன்போலவருதிராய [னும்
வீங்கோதந்தந்தவிளங்கொளிர்வெண்முத்தம் விரைசூழ்கானற்
பூங்கோதைகொண்டுவிலைஞர்போன்மீளும் புகாரேயெம்மூர்.

2. மறையின்மணந்தாரைவன்பரதர்பாக்கத்து மடவார்செங்கை,
இறைவளைகடேற்றுவதை யேழையரொங்ஙன மியாங்கறிகோவை
ய, நிறைமதியுமீனுமெனவன்னநீள்புன்னைநிறையரும்பிப் பூத்
த, பொறைமலர்ப்பூங்கொம் பேறவண்டாம்பல்மலருதும் புகா
ரேயெம்மூர்.

3. உண்டாரைவென்றுவூனொழியாப்பாக்கத்து ளுறையொன்றின்றி
தண்டாநோய்மாதர்தலைத்தருதியென்பதியாங்கறிகோவைய[த்
வண்டாறிரையழிப்பக்கையான்மணன்முகந்து மதிமேனீண்ட
புண்டோய்வெனீர்மல்கமாதர்கடூர்க்கும் புகாரேயெம்மூர். ()

(இவை சார்த்துவரி.)

1. புணர்துணையோடாடும் பொறியலவனோக்கி
இணர்ததைபூங்கான லென்னையுநோக்கி
உணர்வொழியப்போன வொலிதிரைநீர்ச்சேர்ப்பன்
வணர்சுரியைம்பாலோய் வண்ணமுணரேனல்.

2. தம்முடையதண்ணளியுந் தாமுந்தமான்றேரும்
எம்மைநினையாதே விட்டாரேவிட்டகல்க
அம்மெனிணர வடம்புகாளன்னங்காள்
எம்மைமறந்தாரையா மறக்கமாட்டேமால்.

3. புன்கண்கூர்மாலை புலம்புமென்கண்ணேபோல்
துன்பமுழவாய் துயிலப்பெறுதியால்
இன்கள்வாய்நெய்தானீ யெய்துங்கனவினுள்
வன்கணார்கானல் வரக்கண்டுயிலுதியோ.

4. புள்ளிமான்றோராழி போனவழியெல்லாம்
தெள்ளுநீரோதஞ் சிதைத்தாய்மற்றென்செய்கோ
தெள்ளுநீரோதஞ் சிதைத்தாய்மற்றெம்மோடீங்
குள்ளாரோடுள்ளா யுணராய்மற்றென்செய்கோ.

5. நேர்ந்தநங்காதலர் நேமிநெடுந்திண்டேர்
ஊர்ந்தவழிசிதைய வூர்ந்தாயாலோதமே
ஊர்ந்தவழிசிதைய வூர்ந்தாய்மற்றெம்மோடும்
தீர்ந்தாய்போற் றீர்ந்திலையால்வாழிகடலோதமே
பூந்தண்பொழிலே புணர்ந்தாடுமன்னமே
ஈர்ந்தண்டுறையே யிதுதகாதென்னீரோ. (௧௧)

(இவை திணைநிலைவரி.)

1. நன்னிலத்தின்பூணணிந்து நலஞ்சால்பவளக்கலையுடுத்துச்
சென்னற்பழனக்கழனிதொறுந் திரையுலாவுகடற்சேர்ப்ப
புன்னைப்பொதும்பர்மகரத்தின்கொடியோனெய்தபுதுப்புண்கள்
என்னைக்காணுவகைமறைத்தாலன்னைகாணிலென்செய்கோ.

2. வாரித்தரளநகைசெய்து வண்செம்பவளவாய்மலர்ந்து
சேரிப்பரதர்வலைமுன்றிற் றிரையுலாவுகடற்சேர்ப்ப
மாரிப்பீர்த்தலர்வண்ண மடவாள்கொள்ளக்கடவுள்வரைந்
தாரிக்கொடுமைசெய்தாரென் றன்னையறியிலென்செய்கோ.

3. புலவுற்றிரங்கியதுநீங்கப் பொழிற்றண்டலையிற்புகுந்துதிர்ந்த
கலவைச்செம்மண்மணங்கமழத் திரையுலாவுகடற்சேர்ப்ப
பலவுற்றொருநோய்தணியாத படர்நோய்மடவாடனியுழப்ப
பலவுற்றிரங்கியறியாநோ யன்னையறிகிலென்செய்கோ. (௧௨)

(மயங்கு திணைநிலைவரி.)

1. இளையிருள்பரந்ததுவே யெரிசெய்வான்மறைந்தனனே
களைவரும்புலம்புநீர் கண்பொழியுகுத்தனவே
தளையவிழ்மலர்க்குழலாய் தளர்ந்தார்நாட்டுளதாங்கொல்
வளைநெகிழவெரிசிந்தி வந்ததிம்மருண்மாலை.

2. கதிரவன்மறைந்தனனே காரிருள்பரந்ததுவே
எதிர்மலைபுரையுண்கண் ணெவ்வநீருகுத்தனவே
புதுமலர்புரைமுகத்தாய் போனார்நாட்டுளதாங்கொல்
மதியுமிழ்ந்துகதிர்விழுங்க வந்ததிம்மருண்மாலை.

3. பறவைப்பாட்டடங்கினவே பகல்செய்வான்மறைந்தனனே
நிறையிலாநோய்கூர நெடுங்கணீருகுத்தனவே
துறுமலரவிழ்குழலாய் துறந்தார்நாட்டுளதாங்கொல்
மறவியாயென்னுயிர்மேல் வந்ததிம்மருண்மாலை. (௧௩)

வேறு.

1. கைதைவேலிக் கழிவாய்வந்தெம்
பொய்தலழித்துப் போனாரொருவர்
பொய்தலழித்துப் போனாரவரெம்
மையன்மனம்விட் டகல்வாரல்லர்.

2. கானல்வேலிக் கழிவாய்வந்து
நீநில்லென்றே நின்றாரொருவர்
நீநில்லென்றே நின்றாரவரெம்
மானேர்நோக்க மறப்பாரல்லர்.

3. அன்னந்துணையோ டாடக்கண்டு
நென்னனோக்கி நின்றாரொருவர்
நென்னனோக்கி நின்றாரவரென்
நெடுங்கண்விட்டுப் போவாரல்லர். (௧௪)

வேறு.

4. அடையல்குருகே யடையலெங்கானல்
அடையல்குருகே யடையலெங்கானல்
உடைதிரைச்சேர்ப்பற் குறுநோயுரையாய்
அடையல்குருகே யடையலெங்கானல். (௧௫)

5. ஆங்ஙனம்பாடிய ஆயிழைபின்னரும்
காந்தண்மெல்விரற் கைக்கிளைசேர்குரல்
தீந்தொடைச்செவ்வழி யரும்பாலையிசையெழீஇப்
பாங்கினிற்பாடியோர் பண்ணுப்பெயர்த்தாள். (௧௬)

1. நுளையர்விளரி நொடிக்குந்தீம்பாலை
இளிகிளையிற்கொள்ள விறுத்தாயான்மாலை
இளிகிளையிற்கொள்ள விறுத்தாய்மன்னியெற்
கொளவல்லாயென்னுவி கொள்வாழிமாலை.

2. பிரிந்தார்பரிந்துரைத்த பேரருளினீழல்
இருந்தேங்கிவாழ்வா ருயிர்ப்புறத்தாய்மாலை
உயிற்புறத்தாய்நீயாகி யுள்ளாற்றுவென்றன்
எயிற்புறத்துவேந்தனோ டென்னாதிமாலை.

3. பையுணோய்கூரப் பகல்செய்வான்போய்வீழ
வையமோகண்புதைய வந்தாய்மருண்மாலை
மாலைநீயாயின் மணந்தாரவராயின்
ஞாலமோநல்கூர்ந்த ததுவாழிநீமாலை. (௧௭)

எனக்கேட்டுக் கானல்வரியிற் பாடத்தானொன்றின்மேல்வைத்து மாயப்பொய்பலகூட்டு மாயத்தாள் பாடினாளென யாழிசை மேல்வைத்துத் தன்னூழ்வினைவந் துருத்ததாதலின் அவ்வுற்றதிங் கண்முகத்தி கவ்வுகைநெகிழ்ந்தனனாய்ப் பொழுதீங்கு கழிந்த தாதலின் எழுதுமென் றுடனே யெழாதே ஏவலாள ருடன்சூழ்தரக் கோவலன் போயபின்னர் தாதவிழ்மலர்ச்சோலை யோதையாயத் தொலியவித்துக் கையற்ற நெஞ்சினளாய் வையத்தினுட்புக்குக் காதலுடனன்றியே மாதவி தன்மனைபுக்காள். ஆங்கு; மாயிருஞாலத் தரசுதலை வணக்குஞ் சூழியானைச் சுடர்ப்பூட்செம்பியன் மாலைவெண்குடை கவிப்ப ஆழிமால்வரை யகவையாங் கெனவே. (௧௮)

கானல்வரி முற்றிற்று

# வேனிற்காதை

நெடியோன்குன்றமுந் தொடியோள்பௌவமும்
தமிழ்வரம்பறுத்த தண்புனனாட்டு
மாடமதுரையும் பீடாருறந்தையுங்
கலிகெழுவஞ்சியு மொலிபுனற்புகாரும்
அரசுவீற்றிருந்த வுரைசால்சிறப்பின்
மன்னன்மாறன் மகிழ்துணையாகிய
இன்னிளவேனில் வந்ததிவணென
வளங்கெழுபொதியின் மாமுனிபயந்த
இளங்காற்றூத னிசைத்தனனாகலின்
மகரவெல்கொடி மைந்தன்சேனை

புகாறுகோலங் கொன்றுமென்பதுபோற்
கொடிமிடைசோலைக் குயிலோனென்னும்
படையுள்படுவோன் பணிமொழிகூற
மடலவிழ்கானல் கடல்விளையாட்டினுட்
கோவலனூடக் கூடாதேகிய
மாமலர்நெடுங்கண் மாதவிவிரும்பி
வானுறநிவந்த மேனிலைமருங்கின்
வேனிற்பள்ளி யேறிமாணிழை
தெண்கடல்முத்துந் தென்மலைச்சந்துந்
தண்கடனிறுக்குந் தன்மையவாகலிற்
கொங்கைமுன்றிற் குங்குமவளாகத்து
மையறுசிறப்பிற் கையுறையேந்தி
அதிராமரபின் யாழ்கைவாங்கி
மதுரகீதம் பாடினண்மயங்கி
ஒன்பான்விருத்தியுட் டலைக்கண்விருத்தி
நன்பாலமைந்த விருக்கையளாகி
வலக்கைபதாகைக் கோட்டொடுசேர்த்தி
இடக்கைநால்விரல் மாடகந்தழீஇச்
செம்பகையார்ப்பே யதிர்வேகூடம்
வெம்பகைநீக்கும் விரகுளியறிந்து
பிழையாமரபி னீரேழ்கோவையின்
உழைமுதற்கைக்கிளை யிறுவாய்கட்டி
இணைகிளைபகைநட் பென்றிந்நான்கின்
இசைபுணர்குறிநிலை யெய்தநோக்கிக்
குரல்வாயிளிவாய் கேட்டனளன்றியும்
வான்முறைமருங்கி னைந்தினுமேழினும்
உழைமுதலாகவு முழையீறாகவுங்
குரல்குரலாகவுங் குரலீறாகவும்
அகநிலைமருதமும் புறநிலைமருதமும்
அருகியன்மருதமும் பெருகியன்மருதமும்
நால்வகைச்சாதியு நலம்பெறநோக்கி
மூவகையியக்க முறையிளிகழிப்பித்
திறத்திசைப்படுந் தென்றிசைக்காணத்துப்

புறத்தொருபாணியிற் பூங்கொடிமயங்கி
சண்பகமாதவி தமாலங்கருமுகை
வெண்பூமல்லிகை வேரொடுமிடைந்த
அஞ்செங்கழுநீ ராயிதழ்கத்திகை
எதிர்பூச்செம்ம விடைநிலத்தியாத்த
முதிர்பூந்தாழை முடங்கல்வெண்டோட்டு
விரைமலர்வாளியின் வியனிடமாண்ட
ஒருதனிச்செங்கோ லுரவோனாணையின்
ஒருமுகமன்றியு முலகுதொழுதிறைஞ்சுந்
திருமுகம்போக்குஞ் செவ்வியளாகி
அலத்தகக்கொழுஞ்சே றளைஇயல்லது
பித்திகைக்கொழுமுகை யாணிகைக்கொண்டு
மன்னுயிரெல்லா மகிழ்துணைபுணர்க்கும்
இன்னிளவேனி லிளவரசாள்வன்
அந்திப்போதகத் தரும்பிடர்த்தோன்றிய
திங்கட்செல்வனுஞ் செவ்வியனல்லன்
புணர்ந்தமாக்கள் பொழுதிடைப்படினுந்
தணந்தமாக்க டந்துணைமறப்பினு
நறும்பூவாளி நல்லுயிர்கோடலின்
இறும்பூதன்மையஃ தறிந்திடுமின்னென
எண்ணெண்கலையு மிசைந்துடன்போக்கிப்
பண்ணுந்திறனும் புறங்கூறுநாவில்
தலைவாயவிழ்ந்து தனிப்படுதாமத்தின்
விளையாழ்மழலையின் விரித்துரையெழுதி
பசந்தமேனியள் படருறுமாலையின்
வசந்தமாலையை வருகெனக்கூஉய்த்
தூமலர்மாலைத் துணிபொருளெல்லாங்
கோவலற்களித்துக் கொணர்கவீங்கென
மாலைவாங்கிய வேலரிநெடுங்கண்
கூலமறுகிற் கோவலற்களிப்ப
திலகமுமளகமுஞ் சிறுகருஞ்சிலையும்
குழையுங்குமிழுங் கொவ்வையுங்கொண்ட
மாதர்வாண்முகத்து மதைஇயநோக்கமொடு

காதலிற்றோன்றிய கண்கூடுவரியும்
புயல்சுமந்துவருந்திய பொழிகதிர்மதியத்துக்
கயலுலாத்திரிதருங் காமர்செவ்வியிற்
பாகுபொதிபவளந் திறந்துநிலவுதவிய
நாகிளமுத்தி னகைநலங்காட்டி
வருகெனவந்து போகெனப்போகிய
கருநெடுங்கண்ணி காண்வரிக்கோலமும்
அந்திமாலை வந்ததற்கிரங்கிச்
சிந்தைநோய்கூருமென் சிறுமைநோக்கிக்
கிளிபுரைகிளவியு மடவனநடையும்
களிமயிற்சாயலுங் கரந்தனளாகிச்
செருவேனெடுங்கட் சிலதியர்கோலம்
ஒருதனிவந்த வுள்வரியாடலும்
சிலம்புவாய்புலம்பவு மேகலையார்ப்பவும்
கலம்பெறுநுசுப்பினள் காதனோக்கமொடு
திறந்துவேறாயவென் சிறுமைநோக்கிய
புறத்துநின்றாடிய புன்புறவரியும்
கோதையுங்குழலுந் தாதுசேரளகமும்
ஒருகாழ்முத்துந் திருமுலைத்தடமும்
மின்னிடைவருத்த நன்னுதறோன்றிச்
சிறுகுறுந்தொழிலியர் மறுமொழியுய்ப்பப்
புணர்ச்சியுட்பொதிந்த கலாந்தருகலவியில்
இருபுறமொழிப்பொருள் கேட்டனளாகித்
தளர்ந்தசாயற் றகைமென்கூந்தல்
கிளர்ந்துவேறாகிய கிளர்வரிக்கோலமும்
பிரிந்துறைகாலத்துப் பிரிந்தனளாகி
என்னுறுகிளைகட்குத் தன்னுறுதுயரந்
தேர்ந்துதேர்ந்துரைத்த தேர்ச்சிவரியன்றியும்
வண்டமர்கோதையு மாலையுண்மயங்கிக்
கண்டவர்க்குரைத்த காட்சிவரியும்
அடுத்தடுத்தவர்முன் மயங்கியமயக்கமும்
எடுத்தவர்தீர்த்த வெடுத்துக்கோள்வரியும்
ஆடன்மகளே யாதலினாயிழை

பாடுபெற்றவப் பைந்தொடிதனக்கென
அணித்தோட்டுத்திருமுகத் தாயிழையெழுதிய
மணித்தோட்டுத்திருமுக மறுத்தற்கிரங்கி
வாடியநெஞ்சத்து வசந்தமாலையும்
தோடலர்கோதைக்குத் துனைந்துசென்றுரைப்ப
மாலைவாரா ராயினுமாணிழை
காலைகாண்குவமெனக் கையறுநெஞ்சமொடு
பூமலரமளிமிசை பொருந்தாதுவருந்தினள்
மாமலர்நெடுங்கண் மாதவிதானென. (உரு)

வெண்பா.

செந்தா மரைவிரியத் தேமாங்கொழுந்தொழுக
அந்தாரசோகமலரவிழக்—கொந்தார்
இளவேனில்வந்ததா லென்னாங்கொலென்றன்
வளவேனில்கண்ணிமனம். (உசு)

ஊடினாரெல்லா முருவிலான்றன்னாணை
கூடுமினென்றுகுயில்சாற்ற—நீடிய
வேனிற்பானிற்கலந்தாண் மென்பூந்திருமுகத்தைக்
கானிற்பாணிற்கலந்தாய் காண்.

வேனிற்காதை

முற்றிற்று.

# கனாத்திறமுரைத்தகாதை.

கலிவெண்பா.

அகனகரெல்லா மரும்பவிழ்முல்லை
நிகர்மலர்நெல்லொடு தூஉய்ப்பகன்மாய்ந்த
மாலைமணிவிளக்கங் காட்டியிரவிற்கோர்
கோலங்கொடியிடையார் தாங்கொளமேலைநாள்
மாலதிமாற்றாண் மகவுக்குப்பாலளிப்பப்
பால்விக்கிப்பாலகன் றான்சோரமாலதியும்

பார்ப்பானொடுமனையா ளென்மேற்படர்தல்விட்
டேற்பனகூறென் றேங்கிமகக்கொண்
டமரர்தருக்கோட்டம் வெள்ளியானைக்கோட்டம்
புகர்வெள்ளை நாகர்தங்கோட்டம்பகல்வாயில்
உச்சிக்கிழான்கோட்ட மூர்க்கோட்டம்வேற்கோட்டம்
வச்சிரக்கோட்டம் புறம்பணையான்வாழ்கோட்டம்
நிக்கந்தக்கோட்ட நிலாக்கோட்டம்புக்கெங்குந்
தேவிர்காளெம்முறுநோய் தீர்மென்றுமேவியோர்
பாசண்டச்சாத்தற்குப் பாடுகிடந்தாளுக்
கேசும்படியோ ரிளங்கொடியாயாசிலாய்
செய்தவமில்லோர்க்குத் தேவர்வரங்கொடார்
பொய்யுரையன்று பொருளுரையேகையிற்
படுபிணந்தாவென்று பறித்தாள்கைக்கொணடு
சுடுகாட்டுக்கோட்டத்துத் தூங்கிருளிற்சென்றாங்
கிடுபிணந்தின்னு மிடர்கினிப்பேய்வாங்கி
மடியகத்திட்டாண் மகவையிடியுண்ட
மஞ்ஞைபோலேங்கி யழுதாளுக்கச்சாத்தன்
அன்னைநீயேங்கி யழேலென்றுமுன்னை
உயிர்க்குழவிகாணா யென்றக்குழவியாயோர்
குயிற்பொதும்பர்நீழற் குறுகவயிர்ப்பின்றி
மாயக்குழவி யெடுத்துமடிதிரைத்துத்
தாய்கைக்கொடுத்தாளத் தையலாடூய
மறையோன்பின்மாணியாய் வான்பொருட்கேள்வித்
துறைபோயவர்முடிந்த பின்னரிறையோனும்
தாயத்தாரோடு வழக்குரைத்துத்தந்தைக்குந்
தாயர்க்கும்வேண்டுங் கடன்செய்துமேலைநாள்
தேவந்தியென்பாண் மனைவியவளுக்குப்
பூவந்தவுண்கண் பொறுக்கென்றுமேவித்தன்
மூவாவிளநலங் காட்டியென்கோட்டத்து
நீவாவெனவுரைத்து நீங்குதலுந்தூமொழியாள்
ஆர்த்தகணவ னகன்றனனைப்போயெங்குந்
தீர்த்தத்துறைபடிவே னென்றவனைப்போர்த்திங்ஙன்
மீட்டுத்தருவா யெனவொன்றின்மேலிட்டுக்

கோட்டம்வழிபாடு கொண்டிருப்பாள்வாட்டருஞ்சீர்
கண்ணகிநல்லாளுக் குற்றகுறையுண்டென்
றெண்ணியநெஞ்சத் தினையளாய்நண்ணி
அறுகுசிறுபூளை நெல்லொடுதூஉய்ச்சென்று
பெறுக*கணவனோ டென்றாள்பெறுகெனக்
கடுக்குமென்னெஞ்சங் கனவினாலென்கை
பிடித்தனன்போயோர் பெரும்பதியுட்பட்டேம்
பட்டபதியிற் படாததொருவார்த்தை
யிட்டனரூரா ரிடுதேளிட் டென்றன்மேல்
கோவலற்குற்றதோர் தீங்கென்றதுகேட்டுக்
காவலர்முன்னர்யான் கட்டுரைத்தேன்காவலனோ
டூர்க்குற்றதீங்குமொன் றுண்டாலுரையாடேன்
தீக்குற்றம்போலுஞ் செறிதொடீ தீக்குற்ற
முற்றேனோடுற்ற வுறுவனோடியானுற்ற
நற்றிறங்கேட்கி னகைபாகும்பொற்றொடீ இ
கைத்தாயுமல்லை கணவற்கொருநோன்பு
பொய்த்தாய்பழம்பிறப்பிற் போய்க்கடுகவுய்த்துக்
கடலொடுகாவிரி சென்றலைக்குமுன்றின்
மடலவிழ்நெய்தலங் கானற்றடமுள
சோமகுண்டஞ்சூரிய குண்டத்துறைமூழ்கிக்
காமவேள்கோட்டந் தொழுதார்கணவரொடு
தாமின்புறுவ ருலகத்துத்தையலார்
போகஞ்செய்பூமியினும் போய்ப்பிறப்பர்யாமொருநாள்
ஆடுதுமென்ற வணியிழைக்கவ்வாயிழையாள்
பீடன்றெனவிருந்த பின்னரோநீடிய
காவலன்போலுங் கடைத்தலையான்வந்துங்
கோவலனென்றாளோர் குற்றிளையாள்கோவலனும்
பாடமைசேக்கையுட் புக்குத்தன்பைந்தொடி
வாடியமேனி வருத்தங்கண்டியாவும்
சலம்புணர்கொள்கைச் சலதியோடாடிக்
குலந்தருவான்பொருட் குன்றந்தொலைந்த
இலம்பாடுநாணுத் தருமெனக்கென்ன

---

* கணவன்றோளென்றால் என்றும் பாடமுண்டு.

நலங்கேழ்முறுவ னகைநலங்காட்டிச்
சிலம்புளகொண்மெனச் சேயிழைகேளிச்
சிலம்புமுதலாகச் சென்றகலனோ
டுலந்தபொருளீட்ட லுற்றேன்மலர்ந்தசீர்
மாடமதுரை யகத்துச்சென்றென்னோடிங்
கேடலர்கோதா யெழுகென்னநீடு
வினைகடைக்கூட்ட வியன்கொண்டான்கங்குற்
கனைசுடர்கால் சீயாமுன்.

---

நேரிசைவெண்பா.

காதலி கண்ட கனவு கருநெடுங்கண்
மாதவிதன் சொல்லை வறிதாக்கி—மூதை
வினைகடை கூட்ட வியன்கொண்டார் கங்குல்
கனைசுடர்கால் சீயா முன்.

கனாத்திறமுரைத்தகாதை
முற்றிற்று.

---

## நாடுகாண்காதை.

---

வான்கண்விழியா வைகறையாமத்து
மீன்றிகழ்விசும்பின் வெண்மதிநீங்கக்
காரிருணின்ற கடைநாட்கங்குல்
ஊழ்வினைக்கடைஇ யுள்ளந்துரப்ப
ஏழகத்தகரு மெகினக்கவரியும்
தூமயிரன்னமுந் துணையெனத்திரியும்
தாழொடுகுயின்ற தகைசால்சிறப்பின்
நீணெடுவாயி னெடுங்கடைகழிந்தாங்
கணிகிளரரவி னறிதுயிலமர்ந்த
மணிவண்ணன்கோட்டம் வலஞ்செயாக்கழிந்து
பணையைந்தோங்கிய பாசிலைப்போதி
அணிதிகழ்நீழ லறவோன்றிருமொழி
அந்தரசாரிக ளறைந்தனசாற்றும்
இந்திரவிகார மேழுடன்போக்கிப்

புலவூண்டுறந்து பொய்யாவிரதத்
தவலநீத்தறிந் தடங்கியகொள்கை
மெய்வகையறிந்த விழுமியோர்குழீஇ
ஐவகைநின்ற வருகத்தானத்துச்
சந்தியைந்துந் தம்முடன்கூட்டி
வந்துதலைமயங்கிய வான்பெருமன்றத்துப்
பொலம்பூம்பிண்டி நலங்கிளர்கொழுநிழல்
நீரணிவிழவினு நெடுந்தேர்விழவினும்
சாரணர்வரூஉந் தகுதியுண்டாமென
உலகநோன்பிக ளொருங்குடனிட்ட
இலகொளிச்சிலாதலந் தொழுதுவலங்கொண்டு
மலைதலைக்கொண்ட பேரியாறுபோலு
முலகவிடைகழி யொருங்குடனீங்கி
கலையிலாளன் காமர்வேனிலொடு
மலையமாருத மன்னவற்கிறுக்கும்
பன்மலநடுக்கிய நன்மலர்ப்பந்தர்
இலவந்திகையி னெயிற்புறம்போக்கி
தாழ்பொழிலுடுத்த தண்பதப்பெருவழிக்
காவிரிவாயிற் கடைமுகங்கழிந்து
குடதிசைக்கொண்டு கொழும்புனற்காவிரி
வடபெருங்கோட்டு மலர்ப்பொழி னுழைந்து
காவதங்கடந்து கவுந்திப்பள்ளியோர்
பூமரப்பொதும்பர் பொருந்தியாங்கண்
இறுகொடிநுசுப்போ டினைந்தடிவருந்தி
நறும்பல்கூந்தல் குறும்பலவுயிர்த்து
முதிராக்கிளவி முள்ளெயிறிலங்க
மதுரைமூதூர் யாதெனவினவ
ஆறைங்காவதநம் மகநாட்டும்பர்
நாறைங்கூந்த னண்ணித்தெனக்குத்
தேமொழிதன்னொடுஞ் சிறையகத்திருந்த
காவந்திகையைக் கண்டடிதொழுதலும்
உருவுங்குலனு முயர்பேரொழுக்கமும்
பெருமகன்றிருமொழி பிறழாநோன்பும்

உடையீரென்னே வுறுகணாளரின்
கடைகழிந்திங்ஙனங் கருதியவாறென
உரையாட்டில்லை யுறுதவத்தீர்யான்
மதுரைமூதூர் வரைபொருள்வேட்கையன்
பாடகச்சீறடி பரற்பகையுழவாக்
காடிடையிட்ட நாடுநீர்கழிதற்
கரிதிவள்செவ்வி யறிகுநர்யாரோ
உரியதன்றீங் கொழிகெனவொழியீர்
மறவுரைநீத்த மாசறுகேள்வி
யறிவுரைகேட்டாங் கறிவனையேத்தத்
தென்றிசைநன்னாட்டுத் தீதுதீர்மதுரைக்
கொன்றியவுள்ள முடையேனாகலின்
~~போதுவல்யானும் போதுமினென்ற~~
காவுந்தியையைக் கைதொழுதேத்தி
அடிகணீரே யருளுதிராயினித்
தொடிவளைத்தோளி துயர்தீர்த்தேனென
கோவலகாணாய் கொண்டவிந்நெறிக்
கேதந்தருவன யாங்கும்பலகேண்மோ
வெயினிறம்பொறாஅ மெல்லியற்கொண்டு
பயில்பூந்தண்டலை படர்குவமாயின்
மண்பகவீழ்ந்த கிழங்ககழ்குழியைச்
சண்பகநிறைத்த தாதுசோர்பொங்கர்ப்
பொய்யறைப்படுத்துப் போற்றுமாக்கட்குக்
கையறுதுன்பங் காட்டினுங்காட்டும்
உதிர்பூஞ்செம்மலி னொதுங்கினர்கழிவோர்
முதிர்தேம்பழம்பகை முட்டினுமுட்டும்
மஞ்சளுமிஞ்சியு மயங்கரில்வலயத்துச்
செஞ்சுளைப்பலவின் பரற்பகையுறுக்கும்
கயனெடுங்கண்ணி காதற்கேள்வ
வயலுழைப்படர்குவ மெனினேயாங்கு
பூநாறிலஞ்சிப் பொருகயலோட்டி
நீர்நாய்கவ்விய நெடும்புறவாளை
மலங்குமிளிர்செறுவின் விலங்கப்பாயின்
கலங்கலுமுண்டிக் காரிகையாங்கண்

ணகொறூஉ

கரும்பிற்றொடுத்த பெருந்தேன்சிதைந்து
சுரும்புசூழ்பொய்கைத் தூநீர்கலக்கும்
அடங்காவேட்கையி னறிவஞரெய்திக்
குடங்கையின்மொண்டு கொள்ளவுங்கூடும்
குறுநரிட்ட குவளையம்போதொடு
பொறிவரிவண்டினம் பொருந்தியகிடக்கை
நெறிசெல்வருத்தத்து நீரஞரெய்தி
அறியாதடியாங் கிடுதலுங்கூடும்
எறிநீரடைகரை யியக்கந்தன்னில்
பொறிமாணலவனு நந்தும்போற்றா
தூழடியொதுக்கத் துறுநோய்காணில்
தாழ்தருதுன்பந் தாங்கவுமொண்ணா
வயலுஞ்சோலையு மல்லதியாங்கணும்
அயல்படக்கிடக்கு நெறியாங்கில்லை
நெறியிருங்குஞ்சிநீ வெய்யோளொடு
குறியறிந்தவையவை குறுகாதோம்பென
தோமறுகடிஞையுஞ் சுவன்மேலறுவையும்
காவுந்தியைகைப் பீலியுங்கொண்டு
மொழிப்பொருட்டெய்வம் வழித்துணையாகெனப்
பழிப்பருஞ்சிறப்பின் வழிப்படர்புரிந்தோர்
கரியவன்புகையினும் புகைக்கொடிதோன்றினும்
விரிகதிர்வெள்ளி தென்புலம்படரினும்
கால்பொருநிவப்பிற் கடுங்குரலேற்றொடு
சூன்முதிர்கொண்மூப் பெயல்வளஞ்சுரப்பக்
குடமலைபிறந்த கொடும்பஃறாரமொடு
கடல்வளனெதிரக் கயவாய்நெரிக்கும்
காவிரிப்புதுநீர்க் கடுவரல்வாய்த்தலை
ஓவிறந்தொலிக்கு மொலியேயன்றியும்
ஆம்பியுங்கிழாரும் வீங்கிசையேற்றமும்
ஓங்குநீர்ப்பிழாவு மொலித்தல்செய்யா
கழனிச்சென்னெற் கரும்புசூழ்மருங்கின்
பழனத்தாமரைப் பைம்பூங்கானத்துக்
கம்புட்கோழியுங் கனைகுரனாரையும்
செங்காலன்னமும் பைங்காற்கொக்கும்

கானக்கோழியு மானிறக்காக்கையும்
உள்ளூரூரலும் புள்ளும்போதாவும்
வெல்போர்வேந்தர் முனைவிடம்போலப்
பல்வேறுகுழூக்குரற் பரந்தவோதையும்
உழாஅநுண்டொளி யுள்புக்கழுந்திய
கழாஅமுயிர்யாக்கைச் செங்கட்காரான்
சொறிப்புறமுரிஞ்சப் புரிஞெகிழ்புற்ற
குமரிக்கூட்டிற் கொழும்பல்லுணவு
கவரிச்செந்நெற் காய்த்தலைசொரியக்
கருங்கைவினைஞருங் களமருங்கூடி
ஒருங்குநின்றார்க்கு மொலியேயன்றியும்
கடிமலர்கடிந்து முடிநாறழுத்தித்
~~தொடிவளைத்தோளு மாகமுந்தோய்ந்து~~
சேறுடுகோலமொடு வீறுபெறத்தோன்றிச்
செங்கயனெடுங்கட் சின்மொழிக்கடைசியர்
வெங்கட்டொலைச்சிய விருந்திற்பாணியும்
கொழுங்கொடியறுகையுங் குவளையுங்கலந்து
விழுங்குகதிர்தொடுத்த விரியல்சூட்டிப்
பாருடைப்பனர்போற் பரிச்சுனர்தொழ
ஏரொடுநின்ற ரோமங்கலமும்
அரிந்துகால்குவித்தோர் கரிகடாவுறுத்த
பெருஞ்செந்நெல்லின் முகவைப்பாட்டும்
தெண்கிணைப்பொருநர் செருக்குடனெடுத்த
மண்கணைமுழவின் மகிழ்சேயோதையும்
பேரியாற்றடைகரை நீரிற்கேட்ட
ஆர்வநெஞ்சமோ டவலங்கொள்ளார்
உழைப்புலிக்கொடித்தே ரூர்வோன்கொற்றமொடு
மழைக்கருவுயிர்க்கு மழற்றிகழட்டின்
மறையோராக்கிய வானவருணுஅ
இறையுயர்மாட மெங்கணும்போர்த்த
மஞ்சுசூழ்மலையின் மானத்தோன்று
மங்கலமறையோ ரிருக்கையன்றியும்
பரப்புநீர்க்காவிரி பாவைதன்புதல்வர்
இரப்போர்சுற்றமும் புரப்போர்கொற்றமும்

முழவிடைவிளைப்போர் பழவிறலூர்களும்
பொங்கழியாலைப் புகையொடுபரந்து
மங்குல்வானத்து மலையிற்றோன்றும்
ஊரிடையிட்ட நாடுடன்கண்டு
காவதமல்லது கடவாராகிப்
பன்னாடங்கிச் சென்னாளொருநாள்
ஆற்றுவீயரங்கத்து வீற்றுவேறாகிக்
குரங்கமையுடுத்த மரம்பயிலடுக்கத்து
வானவருறையும் பூநாறொருசிறைப்
பட்டினப்பாக்கம் விட்டனர்நீங்காப்
பெரும்பெயரைய ரொருங்குடனிட்ட
இலங்கொளிச்சிலாதல மேலிருந்தருளிற்
பெருமகனதிசயம் பிறழாவாய்மைத்
தருமஞ்சாற்றுஞ் சாரணர்தோன்றப்
பண்டைத்தொல்வினை பாறுகவென்றே
கண்டறிகவுந்தியொடு காலுறவீழ்ந்தோர்
வந்தகாரணம் வயங்கியகொள்கைச்
சிந்தைவிளக்கிற் றெரிந்தோனாயினும்
ஆர்வமுஞ்செற்றமு மகலநீக்கிய
வீரனாகலின் விழுமங்கொள்ளான்
கழிபெருஞ்சிறப்பிற் கவுந்திகாணாய்
ஒழிகெனவொழியா தூட்டும்வல்வினை
இட்டவித்தி னெதிர்ந்துவந்தெய்தி
ஒட்டுங்காலை யுதிர்க்கவுமொண்ணா
கடுங்கானேர்வெளி யிடுஞ்சுடரென்ன
ஒருங்குடனில்லா வுடம்பிடையுயிர்கள்
அறிவனறவோ னறிவுவரம்பிகந்தோன்
செறிவன்சினேந்திரன் சித்தன்பகவன்
தருமமுதல்வன் றலைவன்றருமன்
பொருளன்புனிதன் புராணன்புலவன்
சினவரன்றேவன் சினகதிநாயகன்
பரமன்குணவதன் பரத்திலொளியோன்
தத்துவன்சாத்துவன் சாரணன்காரணன்
சித்தன்பெரியவன் செம்ம றிகழொளி

இறைவன்குரவ னியல்குணனெங்கோ
குறைவில்புகழோன் குணப்பெருங்கோமா
சங்கரனீசன் சயம்புசதுமுகன்
அங்கம்ப தா னருகனருண்முனி
பண்ணவனெண்குணன் பாத்தில்பழம்பொருள்
விண்ணவன்வேத முதல்வன்விளங்கொளி
ஓதியவேதத் தொளியுறினல்லது
போதார்பிறவிப் பொதியறையோரெனச்
சாரணர்வாய்மொழி கேட்டுத்தவமுதல்
காவுந்தியையுந்தன் கைத்தலைமேற்கொண்டு
ஒருமூன்றவித்தோ னோதியஞானத்
திருமொழிக்கல்லதென் செவியகந்திறவா
காமனைவென்றோ னாயிரத்தோரெட்டு
நாமமலலது ~~நவிலாதென்நா~~
ஐவரைவென்றோ னடியிணையல்லது
கைவரைகாணினுங் காணாவென்கண்
அருளறம்பூண்டோன் திருமெய்க்கல்லதென்
பொருளில்யாக்கை பூமியிற்பொருந்தாது
அருகனறிவ னருகற்கல்லதென்
இருகையுங்கூடி யொருவழிக்குவியா
மலர்மிசைநடந்த மலரடிக்கல்லதென்
தலைமிசையுச்சி தானணிபொறாது
இறுதியிலின்பத் திறைமொழியல்லது
மறுதரவோதி மனம்புடைபெயரா
என்றவனிசைமொழி யேத்தக்கேட்டதற்
கொன்றியமாதவ னுயர்மிசையோங்கி
நிவந்தோங்கொருமுழ நீணிலநீங்கிப்
பவந்தருபாசங் கவுந்திகெடுகென்
றந்தரமாறாப் படர்பவற்றெழுது
பந்தமறுகெனப் பணிந்தனர்போந்து
காரணிபூம்பொழிற் காவிரிப்பேரியாற்று
நீரணிமாடத்து நெடுந்துறைபோகி
மாதருங்கணவனு மாதவத்தாட்டியும்
தீதுதீர்நியமத் தென்கரையெய்திய

...க்கைப் பூம்பொழிலிருந்துழி
விடைவிளை போத்து... ர்த்தை வறுமொழியாளனொடு
கொங்கவிழ்பூம்பொழிற் குறுகினர்சென்றுழி
காமனுந்தேவியும் போலுமீங்கிவர்
ஆரெனக்கேட்டீ யறிகுவமென்றே
நோற்றுணல்யாக்கை நொசிதவத்திருடன்
ஆற்றுவழிப்பட்டோ ராரெனவினவவென்
மக்கள்காணீர் மானுடயாக்கையர்
பக்கநீங்குமின் பரிபுலம்பினரென
உடன்வயிற்றோர்க ளொருங்குடன்வாழ்க்கை
கடவதுமுண்டோ கற்றறிந்தீரெனத்
தீமொழிகேட்டுச் செவியகம்புதைத்துக்
காதலன்முன்னர்க் கண்ணகிநடுங்க
எள்ளுநர்போலுமிவ ரென்பூங்கோதையை
முள்ளுடைக்காட்டு முதுநரியாகெனக்
கவுந்தியிட்ட தவந்தருசாபம்
கட்டியதாதலிற் பட்டதையறியார்
குறுநரிநெடுங்குரற் கூவிளிகேட்டு
நறுமலர்க்கோதையு நம்பியுநடுங்கி
நெறியினீங்கியோர் நீரலகூறினும்
அறியாமையென் றறியல்வேண்டும்
செய்தவத்தீர்நுந் திருமுன்பிழைத்தோர்க்
குய்திக்கால முரையீரோவென
அறியாமையி னிழிபிறப்புற்றோர்
உறையூர்நொச்சி யொருபுடையொதுங்கிப்
பன்னிருமதியம் படர்நோயுழந்தபின்
முன்னையுருவம் பெறுகவீங்கிவரென
சாபவிடைசெய்து தவப்பெருஞ்சிறப்பின்
காவுந்தியையுந் தேவியுங்கணவனும்
முறஞ்செவிவாரண முன்சமமுருக்கிய
புறஞ்செவிவாரணம் புக்கனர்புரிந்தென...

நாடுகாண்காதை
முற்றியது.